வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல. 390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல. 285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 16.06.2025 திங்கட்கிழமை இதழ் : 167 பக்கங்கள் : 12

## வவுனியா உள்ளூராட்சி சபைகள்:
# சிறுபான்மையின கட்சிகளிடையே ஆட்சி அமைக்க பொது இணக்கம்!



வவுனியா, ஜூன் 16

**வவுனியா மாநகர சபை உட்பட நான்கு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் பொது இணக்கம் ஒன்றை எட்டியுள்ளன.**

நேற்றைய தினம் குருமன்காட்டில் அமைந்துள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் வவுனியா மாவட்ட பணிமனையில் நடந்த கூட்டத்திலேயே இந்த இணக்கம் எட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜனநாயக தேசிய கூட்டணி மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இதன்போது, வவுனியாவின் 5 உள்ளூராட்சி சபைகளில் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் ஆட்சி அமைப்பது குறித்து பேசப்பட்டது.

சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்த இந்தப் பேச்சில் கட்சிகள் இணைந்து பொது இணக்கம் ஒன்றை எட்டின. இதன்படி, வவுனியா மாநகர சபையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு மாநகர முதல்வர் பதவியை வழங்குவதுடன், முதல் 2 வருடங்களுக்கு பிரதி முதல்வர் பதவியையும் அந்தக் கட்சிக்கே வழங்குவது என்றும்,

11

## வவுனியா மாநகர சபை முதல்வராக காண்டீபன்?

- குமார. கோகுலன் -

வவுனியா, ஜூன் 16

வவுனியா மாநகர சபைக்கான முதல்வர், பிரதி முதல்வர் தெரிவு இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்த நிலையில், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சுந்தரலிங்கம் காண்டீபன் முதல்வராக பெயரிடப்படவுள்ளார் என்று தெரிய வருகிறது.

இதனிடையே, வவுனியா மாநகர சபையின் முதல்வர் பதவி தெரிவில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு ஆதரவு வழங்குவது என்று

11

## வவுனியா மாநகர சபையில் நாமே ஆட்சியமைப்போம்!

### தேசிய மக்கள் சக்தி

- குமார. கோகுலன் -

வவுனியா, ஜூன் 16

"வவுனியா மாநகர சபையின் ஆட்சியை நாங்களே கைப்பற்றுவோம்", என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

வவுனியா மாநகர சபையின் முதல்வர், பிரதி முதல்வர் தெரிவு தொடர்பில் நேற்று தேசிய மக்கள் சக்தி, சிறீலங்காக தொழிலாளர் கட்சி மற்றும் சில சுயேச்சை குழுக்கள் கூடி பேச்சு நடத்தின.

11

## தனியார் பல்கலைக்கழக பட்டங்களின் தரம் குறித்து ஆய்வு!

### பிரதமர் ஹரிணி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

தனியார் பல்கலைக்கழகங்களின் கல்வியியல் பட்டங்களின் தரம் தொடர்பில் முறையான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இசுறுபாயவில் உள்ள கல்வி அமைச்சு வளாகத்தில் ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்க பிரதிநிதிகளுடனான

11



## ஐ. எம். எவ். பிரதி முகாமை பணிப்பாளர் இலங்கை வருகை

கொழும்பு, ஜூன் 16

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக அவர் நேற்றைய தினம் நாட்டை வந்தடைந்தார். இதன்போது, "பொருளாதார சவால்கள் பிராந்தியத்துக்கான வாய்ப்புகள் குறித்தும், சர்வதேச நாணய நிதியம் இவற்றுக்கு எவ்வாறு ஆதரவளிக்கலாம் என்பது குறித்தும் அறிந்து கொள்வதற்காக அதிகாரிகள், சிவில் சமூகத்தினர், வர்த்தக சமூகத்தினருடன் பேச்சுகளில்

11

## பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வழிபாட்டுக்கு அனுமதி!

யாழ்ப்பாணம், ஜூன் 16

உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள பலாலி கிழக்கு சிறீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பொதுமக்கள் சுதந்திரமாக வழிபாட்டில் ஈடுபடமுடியும் என்று இராணுவம் அறிவித்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் இந்த ஆலயத்துக்கு சென்று வழிபடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

11

## 304 சிறுமிகள்மீது கடந்த ஆண்டு கிழக்கில் பாலியல் துன்புறுத்தல்

மட்டக்களப்பு, ஜூன் 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் 93 சிறுமிகள் உட்பட கிழக்கு மாகாணத்தில் 304 சிறுமிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு பதிவான இந்த சம்பவங்களில் பாதிக்கப்பட்ட அனைவரும் 16 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று கிழக்கு மாகாண பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

(விரிவான செய்தி பக்கம் 8இல்)

## நகைக்காக மூதாட்டி கொலை:
## இலங்கை பெண்ணும் மகனும் தமிழ்நாட்டில் கைதாகினர்!

சென்னை, ஜூன் 16

வயதான மூதாட்டி ஒருவரை கொன்று அவரின் நகைகளை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் இலங்கையை சேர்ந்த தமிழ் பெண் ஒருவரும் அவரின் மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டின் பரமக்குடியில் ஞானசௌந்தரி (வயது 92) என்ற மூதாட்டியை கரூரில் வசித்து வரும் இலங்கையை சேர்ந்த அன்னலட்சுமி (வயது 52) என்பவர் கொன்றார் என்று இறந்தவரின் உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடளித்தனர்.

11

## மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்!

ஜெனிவா, ஜூன் 16

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 59 ஆவது கூட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி, எதிர்வரும் ஜூலை 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. எனினும், இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் உள்வாங்கப்படவில்லை என்று தெரிய வருகிறது.

ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், அதன் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் 'உலகளாவிய மனித உரிமைகள் நிலவரம்' தொடர்பான அறிக்கையுடன் இந்தக் கூட்டத் தொடர் ஆரம்பமாகிறது.

இன்றைய தினம் ஆரம்பமாகும் இந்தக் கூட்டத் தொடரின் கால அட்டவணையில் இலங்கை விவகாரம் உள்வாங்கப்படவில்லை. இந்த

11

## இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 140 கோடி டொலரால் மிகைப்படுத்தல்!

### ஆய்வில் வெளிப்பட்டது தகவல்

கொழும்பு, ஜூன் 16

இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு சுமார் 140 கோடி அமெரிக்க டொலரால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்று ஆய்வு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

சீன மக்கள் வங்கியுடன் உள்ள ஆயிரம் கோடி யுவான் (140 கோடி டொலர்) பெறுமதியான நாணய பரிமாற்றத்தை கையிருப்பில் சேர்த்தமையால் இந்த நிலைமை உருவாகியுள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் ஆய்வு நிறுவனம் மேற் கொண்ட ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தற்போது சர்வதேச அளவில் வெளிநாட்டு கையிருப் பாகக் கருதப்பட

11

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித புதைகுழிகளை மனித உரிமை ஆணையாளர் பார்வையிட வேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

கிளிநொச்சி, ஜூன் 16

இலங்கை வரும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்திக்க வேண்டும். அத்துடன், செம்மணி, மன்னார், கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிகளை பார்வையிட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடத்திய



செய்தியாளர் சந்திப்பிலேயே சங்கத்தின் தலைவி இந்தக் கோரிக்கைளை முன்வைத்தார்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்ட எங்களின் பிள்ளைகளுக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை. இந்த அரசாங்கமும் நீதியை பெற்று தருவதற்கு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை.

அம்பாறை தம்பிலுவில் மத்திய சந்தை பகுதியில் இயங்கும் அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பணிமனையை உடனடியாக அகற்றுமாறு அதன் தலைவிக்கு மக்களின் வாக்குகளை பெற்று தவிசாளரான சசிக்குமார் அறிவித்துள்ளார். இதனைக் கண்டித்து போராட்டம் ஒன்றை நாளை (இன்று) திங்கட்கிழமை நடத்தவுள்ளோம்", என்றும் தெரிவித்தார். (ஐ)

# தீவகத்தில் ஒதுங்கும் இரசாயன மாசுகளை அகற்றும் பணி தீவிரம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணத்தின் தீவக பகுதி கடற்கரைகளில் ஒதுங்கி வரும் பிளாஸ்ரிக் - பொலித்தீன் தயாரிப்புக்கான இரசாயன மூலப்பொருட்களை அகற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் நயினாதீவு தெற்கு கடற்கரை பகுதியில் யாழ். மாவட்ட கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின்



தலைமையில் விமானப் படை, கடற்படையின் உதவியுடனும் இரசாயன மூலப் பொருளை அகற்றும் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. (ஐ)

# பசுவின் கயிற்றில் சிக்கி 9 வயது சிறுவன் மரணம்

கொழும்பு, ஜூன் 16

பசுவின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றில் சிக்கி படுகாயமடைந்த 9 வயது சிறுவன் உயிரிழந்தார்.

அநுராதபுரம், விஹாரபாலு கம வித்யாராஜ வித்தியாலயத்தில் 4 ஆம் வகுப்பில் கல்வி கற்ற சிறுவன் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த சிறுவன் தனது சில நண்பர்களுடன் பக்கத்து வீட்டில் வளர்க்கப்பட்ட பசுவுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது பசு திடீரென வீதியில் வேகமாக ஓடியது.

அப்போது, பசுவின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றில் சிக்கிய சிறுவன், சுமார் 900 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டார். படுகாயங்களுடன் மீட்கப்பட்ட சிறுவன் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிறுவன் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

# தமிழர் விடுதலை கூட்டணியுடன் தமிழ் அரசு பயணிக்க வேண்டும்!

## ஆனந்தசங்கரி மீண்டும் அழைப்பு

கிளிநொச்சி, ஜூன் 16

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து பயணிக்க தமிழ் அரசுக் கட்சி முன்வர வேண்டும் என்று தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி அழைப்பு விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "பல்லாண்டு கால பகைமையை மறந்து ஜீ. ஜீ. பொன்னம்பலம், தந்தை செல்வா இணைந்தே தமிழர் விடுதலை கூட்டணியை உருவாக்கினர். தமிழ் மக்களின் நலன் கருதி எதிரும் புதிருமாக இருந்த தலைவர்கள் காலத்தின் தேவையை உணர்ந்து ஒன்றாகியே இந்தக் கட்சியை உருவாக்கினர். அந்த பெரியார்களின் மறைவுக்கு பின்னர் அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமாக நான் இருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அவர்களின் ஆசீர்வாதமும் எனக்கு இருந்தது.

அந்த பெரியார்களால் உருவாக்கப்பட்ட கட்சியில் இணைந்து ஒற்றுமையாக செயல்படுமாறே நான் அழைக்கின்றேன். மக்களின் இன்றைய அரசியல் நிலைமையில் ஒருமைப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு உருவாகியுள்ளது. தமிழ் அரசுக் கட்சியினர் மீண்டும் எம்முடன் இணைந்து பயணிக்க வேண்டும். சுமந்திரனுக்கு இந்த அழைப்பை நான் விடுக்கிறேன். தமிழர் விடுதலைக் கூட்டணியில் மீண்டும் இணைவதன் மூலம் நன்மையான விடயங்களை பெற முடியும்.

இந்திய அரசமைப்பு முறையிலான தீர்வையே நான் வலியுறுத்தி வருகின்றேன். சிங்கள, இஸ்லாமிய மக்களும் அதனை வரவேற்றனர். அந்த தீர்வுத் திட்டத்துக்காக நாம் தொடர்ந்தும் முயற்சித்து வெற்றி பெற முடியும். அதற்கான காலம் மீண்டும் உருவாகியுள்ளது. அதனை உணர்ந்து செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# சிறீலங்கா தொழிலாளர் காங்கிரஸின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் உறுதியேற்பு




வவுனியா, ஜூன் 16

சிறீ லங்கா தொழிலாளர் கட்சியின் வன்னி மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தலைமையில் வவுனியா குருமண்காட்டியுள்ள விடுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில், கடந்த உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 26 உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கட்சி முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-10)

# நுவரெலியாவில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 16

சீரற்ற காலநிலையால் நுவரெலியா மாவட்டத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவும் சீரற்ற கால நிலையால் கால் நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.



இதே வேளை, சீரற்ற காலநிலையால் நாடு முழுவதும் 97 குடும்பங்களைச் சேர்ந்த 353 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)

# குடத்தனை வாள்வெட்டில் 4 இளைஞர்கள் படுகாயம்!

வடமராட்சி, ஜூன் 16

வடமராட்சி கிழக்கு - குடத்தனை இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து இடம்பெற்ற வாள்வெட்டில் நால்வர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இந்த வாள்வெட்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இரு குழுக்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே வாள்வெட்டுக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதில், காயமடைந்த நால்வர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பலருக்கு இடமாற்றங்கள்!

கொழும்பு, ஜூன் 16

பொலிஸ் துறையில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், பல பொலிஸ் பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நடப்பு அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் தொடர்ந்தும் பல தடவைகளாக பொலிஸ் துறையில் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 16

சீரற்ற வானிலையால் நாட்டின் சில பகுதிகளுக்கு முதலாம் மற்றும் இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு நேற்று வரை விடுக்கப்பட்டிருந்த முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி மற்றும் அயகம பிரதேச செயலக பிரிவுகளுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது. (ஐ)

# கண்டி - பேராதனை இடையிலான ரயில் சேவை வழமைக்கு திரும்பியது!

கண்டி, ஜூன் 16

கண்டி, பேராதனை ரயில் நிலையங்களுக்கிடையே தடைப்பட்டிருந்த ரயில் சேவை வழமைக்கு திரும்பியுள்ளது.

கொழும்பு - கண்டி ரயில் பாதையில் கண்டி ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள வில்லியம் கோபல்லாவ மாவத்தையில் அமைந்துள்ள நீதிமன்ற வளாகத்துக்கு அருகில் ரயில் பாதையில் திடீரென ஏற்பட்ட தாழிறக்கம் காரணமாக, கண்டி - பேராதனை இடையே தற்காலிகமாக ரயில் சேவை இடை நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது புகையிரத சேவைகள் மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளது.

மேலும், கண்டி ரயில் நிலையத்துக்கு வந்து செல்லும் அனைத்து ரயில் சேவைகளும் திட்டமிட்டபடி இயங்கும் என்று புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
16.06.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# போட்டி உலகில் போதனைகள்

புதிதாக தெரிவு செய்யப்பட்ட பாப்பரசர் றொபேர்ட் பிரான்சிஸ், அவரின் முதலாவது பிரசங்கத்தில் போர்களை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தார். லியோ ஓர் அமெரிக்கர். வத்திக்கான் வரலாற்றில் முதன் முறையாக ஓர் அமெரிக்கர் பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இது தொடர்பில் முன்னைய தலையங்கம் ஒன்றிலும் குறிப்பிட்டிருந்தோம். அதாவது, போர்களை நிறுத்துமாறு எவரும் கோரிக்கைகளை விடுக்கலாம். ஆனால், ஆதிக்கப் போட்டிகளால் வழிநடத்தப்படும் உலகில் போர்கள் காலத்துக்குக் காலம் வெளிவந்த வண்ணமே இருக்கிறது. அதனை எவராலும் தடுக்க முடிவதில்லை. போர்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதுதான் மனிதகுல விருப்பம். ஆனால், அவ்வாறான உயர்ந்த விருப்பங்களால் உலகம் வழிநடத்தப்படவில்லை என்பதுதான் கசப்பான உண்மையாகும்.

பொதுவாக மதத் தலைவர்கள் என்போர் இவ்வாறான கருத்துகளை அவ்வப்போது பதிவு செய்வது உண்டு. இன்னொரு புறம் மதவாதிகளோ உலகின் பல பாகங்களில் அரசு சாரா யுத்தங்களை வழிநடத்துபவர்களாகவும் இருக்கின்றனர். இன்றைய உலகில் யுத்தம் தனியார் மயப்படுத்தப்பட்டு விட்டது. இதற்கு பின்னால் மதமே பிரதான ஆயுதமாக இருக்கிறது.

மதத்தின் பெயரால் உலகில் பல அழிவுகள் நடந்து கொண்டே இருக்கின்றன. பல அப்பாவி மக்கள் எதற்காகத் தாங்கள் இலக்கு வைக்கப்படுகிறோம் என்று தெரியாமலேயே இறந்து கொண்டிருக்கின்றனர். ஹமாஸ் ஆரம்பித்த யுத்தம் மத்திய கிழக்கு முழுவதையும் பீடித்து விடுமோ என்னும் நிலையில் நகர்கிறது. ஹமாஸ் ஈரானால் வழிநடத்தப்படுகிறது. இஸ்ரேலை நிர்மூலமாக்க வேண்டும் என்பதே ஈரானின் இலக்கு. இந்தப் பின்புலத்தில்தான் அப்பாவி யூதர்களை இலக்கு வைத்து அமைதி நிலையை ஹமாஸ் குழப்பியது.

யூத மக்கள்மீதான ஹமாஸின் தாக்குதலைத் தொடர்ந்துதான் காசா பகுதியை நோக்கி இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் மத்திய கிழக்கில் ஏற்பட்டிருக்கும் யுத்த சூழலுக்கு பின்னால் இஸ்லாமிய அடிப்படைவாத சிந்தனையும் அதன் மேலாதிக்க விருப்பமும் இருக்கிறது.

இலங்கையிலும் மதத் தலைவர்கள் என்போர் தங்களுக்குத் தெரிந்தவாறு நல்லிணக்கம் மற்றும் சமாதானம் தொடர்பில் பேசுவது உண்டு. 2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் ஒரு புதிய போக்கும் தலைநீட்டியிருக்கிறது. அதாவது. அனைத்திலும் வெள்ளை மற்றும் காவி தரித்தவர்களையும் உள்வாங்குவது. மக்கள் போராட்டங்கள் என்னும் பெயரில் இடம்பெறும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் வெள்ளை மற்றும் காவித் துறவிகளும் ஒரு முக்கிய தரப்பாக இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஊடகங்களும் அவர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துமளிக்கின்றன. தமிழ்த் தேசியம் என்றால் என்ன என்றும் அவர்கள் மற்றவர்களுக்கு வகுப்பெடுக்க முற்படுதும் தாராளமாகவே இடம்பெறுகின்றன. ஊடகங்களும் அவ்வாறான கருத்துகளுக்கு போதிய இடத்தை வழங்கி வருகின்றன. 2009இற்கு முன்னர் அவ்வாறான போக்கு இருந்ததில்லை. சாமியார்கள் எவரும் அரசியல் வகுப்பு எடுப்பவர்களாக இருந்ததில்லை.

இவ்வாறான போதனைகளால் எந்தவொரு பயனும் இல்லை. எவ்வாறு அதிகார உலகில் போதனைகளுக்கு பயனில்லாமல் இருக்கிறதோ அதே போன்றுதான், உள்ளூர் அரசியல் விடயத்திலும் இவ்வாறான துறவிப் போதனைகளுக்கு எந்தவொரு பெறுமதியும் இருந்ததில்லை - இருக்கப் போவதுமில்லை.

இவ்வாறான சாமியார்களை அரசியலுக்குள் இழுத்ததில் சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்களும் ஒரு முக்கிய காரணியாவர். அதே போன்று அரசியலை தூரநோக்கோடு ஆராய்ந்து விடயங்களை முன்வைக்க வேண்டிய கருத்துருவாக்கிகள் என்போரும் கூட சாமியார்களுக்கு தமிழ்த் தேசிய பொன்னாடைகள் போர்த்த முற்பட்டதும் இன்னொரு பிரதான காரணம். இவ்வாறான காரணங்களால் ஆசைகளை துறந்தவர்கள் பலர் ஈழ அரசியலில் போதனை செய்ய ஆசைப்படுபவர்களாக மாறியிருக்கின்றனர்.

# இரு குழுக்களுக்கிடையில் மோதல் குடத்தனையில் நால்வர் படுகாயம்

*யாழ்ப்பாணம், ஜூன் 16*

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு குடத்தனை மேற்குப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் மதியம் இரண்டு குழுக்களுக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ள நிலையில் அது மோதலாக மாறி வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், படுகாயமடைந்த நால்வரே பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# யானை - மனித மோதலை குறைக்கும் விழிப்புணர்வு திட்டம் மட்டக்களப்பில்

*மட்டக்களப்பு, ஜூன் 16*

மட்டக்களப்பில் யானை - மனித மோதலை குறைக்கும் முகமாக முதற்கட்ட விழிப்புணர்வு வேலைத்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தும்பாலஞ்சோலை கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள சுற்றுவட்டார பொறுப்பதிகாரி நா. சுரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செங்கலடி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், செங்கலடி பிரதேச சபை ஊழியர்கள், வனஜீவராசிகள் திணைக்கள ஊழியர்கள் உள்ளிட்டோருடன் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

தும்பாலஞ்சோலை கிராமத்தில் யானைகள் அதிகம் வரும் காடுகளாக உள்ள வனாந்தர பகுதி சிரமதானம் செய்யப்பட்டதுடன், அங்கு வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, குறித்த கிராமங்களில் வீடு வீடாகச் சென்று யானை வருவதைத் தடுக்கும் முகமாக மக்களுக்கு விழிப்புணர்வு செய்யப்பட்டதுடன், துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது. (எ)

# மீசாலை - அல்லாரை வீதி புனரமைப்பில் அதிருப்தி

## கண்காணிப்பு குழு அமைக்க கோரிக்கை


*சாவகச்சேரி, ஜூன் 16*

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் மீசாலை - அல்லாரை வீதி புனரமைக்கப்பட்டு வருகின் றது. இந்த வீதியின் புனரமைப்பின் தரம் தொடர்பிலும் புனரமைப்பின் போது பின்பற் றப்படுகின்ற நடைமுறை தொடர்பிலும் பொதுமக்களால் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் நேற்று அங்கு சென்ற சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் ஞா. கிஷோர் மற்றும் உறுப்பினர் ரமேஷ் ஆகியோர் வீதிப் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டதோடு பொதுமக்களோடும் கலந்துரையாடினர்.



வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரோடு கலந்துரையாடி அப்பகுதி மக்களை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு ஒன்றை உருவாக்கிய பின்னர் வீதிப் புனரமைப்பு பணிகளை முன்னெடுக்குமாறு கிஷோர் வேண்டுகோள் விடுத்தார். அதுவரை புனரமைப்பு பணிகளை நிறுத்தி வைக்குமாறும் கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கண்காணிப்புக் குழு அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்தனர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
கணவன் மனைவிக்குள் அந்யோன்யம் பிறக்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். நட்பு வட்டம் விரியும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். மகிழ்ச்சிகரமான நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படமால் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். உங்களின் திறமைகளை சிலர் குறைத்து மதிப்பிடுவார்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. புதியவர்கள் நண்பர்களாவார்கள். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களால் ஆதாயம் அடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.அமோகமான நாள்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத்தொல்லை குறையும். வேற்றுமதத்தவர் உதவுவார்கள்.

**துலாம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். புது வேலை கிடைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்**
உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். அரசாங்கத்தாலும் அதிகாரப் பதவியில் இருப்பவர்களாலும் ஆதாயம் உண்டு.

**தனுசு**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உடல் நலம் சீராகும். அழகும் இளமையும் கூடும். மனசாட்சி படி செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சின்ன சின்ன கவலைகள் வந்துபோகும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள். வியாபாரத்தில் பணியாளர்களால் டென்ஷன் ஏற்படும்.

**கும்பம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். அரசு காரியங்கள் இழுபறியாகும். அனாவசிய செலவுகளைத் தவிர்க்கப்பாருங்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். புகழ் கௌரவம் கூடும் நாள்.

# பொலிகண்டியில் நேற்று அதிகாலை 220 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது



யாழ்ப்பாணம், ஜூன் 16
வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிகண்டி குழந்தையேசு ஆலயம் முன்பு கடற்கரைப் பகுதியில் வைத்து 220 கிலோ கிராம் கஞ்சாப் பொதிகள் கைப் பற்றப்பட்டுள்ளன. நேற்று அதிகாலை 03: 15 மணியளவில் இந்தியாவிலிருந்து படகு மூலமாக கடத்தி வரப்பட்ட கஞ்சாப் பொதிகளை இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து கைப் பற்றியுள்ளனர். அத்தோடு, கஞ்சா கடத்தலுக்குப் பயன்படுத்திய படகு மற்றும் இயந்திரம் என்பனவும் கைப்பற்றப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவப் புல னாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், கரவெட்டி விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து கஞ்சாக் கடத்தலை முறியடித்துள்ளனர். (எ)

# மாற்றுத்திறனாளிகளின் அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்த வேண்டும்

## கருவி நிறுவனம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 16
ஏனைய பிரஜைகள் போன்று மாற்றுத்திறனாளிகளின் குறிப்பாக கண்பார்வை இல்லாத மாற்று வலுவுள்ளோருக்கான அடிப்படை வசதிகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனகருவி நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் இவ்வாறு வலியுறுத்திய குறித்த அமைப்பின் நிர்வாகிகள் மேலும் கூறுகையில்,மாற்றுத் திறனாளிகளும் இந்த நாட்டின் பிரஜைகளே.

அவர்களும் சகலதும் பெற்று உறுதியாக வாழ வேண்டும். ஆனால், எமது நாட்டில் அத்தகைய ஒரு நிலையான பொறிமுறை இல்லாதுள்ளது.

குறிப்பாக பாடசாலைகள், தொழில் இடங்கள், பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட இடங்களில் அல்லது சேவை பெறும் இடங்களில் நாளாந்தம் பல்வேறு இடர்பாடுகளை சந்திக்க நேரிடுகின்றது.

இதில், பொதுப் போக்குவரத்திலேயே அதிகளவு இடர்பாடுகள் ஏற்படுகின்றன. இதை குறித்த சேவை வழங்குநர்களே எமது நிலைமையை உணர்ந்து, உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து தீர்வுகளை தரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

குறிப்பாக சமூக சேவைகள் அதிகாரிகள் இதில் அதிக அக்கறை எடுத்து பொறிமுறையை உருவாக்கி சேவையை இலகுவாகவும் மனித நேயத்துடனும் பெற்றுக்கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும், எமது வருமான ஈட்டல் மற்றும் பொருளாதாரத்துக்காக நாம் கருவி நிறுவனத்தின் ஊடாக பல உற்பத்திப் பொருட்களை செய்து சந்தைப்படுத்தி வருகின்றோம்.

அதற்காக எமது மாற்றுத்திறனாளிகள் பலர் வெளிக்கள பணிகளில் ஈடுபடுகின்றனர்.

ஆனால் தற்போது எமது இயலாமையை பயன்படுத்தி, குறிப்பாக அருவி நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்தி பலர் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

எனவே, மோசடிகளை மக்கள் விழிப்புடன் எதிர்கொண்டு எமது வாழ்வியலை வலுப்படுத்துவது அவசியம் என்றும் கேட்டுக்கொண்டனர். (எ-05)

சமாதானத்தை கட்டியெழுப்பும் நோக்கில்

# சந்நிதியிலிருந்து கதிர்காமம் நோக்கி நல்லிணக்க பாதயாத்திரை ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 16
தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தினரின் ஏற்பாட்டில் நிலையான சமாதானத்துக்காக மத நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் சந்நிதியிலிருந்து கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை நேற்றுக் காலை 09: 00 மணியளவில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பமானது.

சந்நிதியான் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆரம்பமான பாதயாத்திரை சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு சென்று அங்கு விசேட வழிபாடுகள், சந்நிதியான் ஆச்சிரம உபசரணைகள், உதவிகளுடன் கருத்துரைகள் என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து பாதயாத்திரை ஆரம்பமானது. குறித்த பாத யாத்திரையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஐந்து இளைஞர்கள் இணைந்துள்ளனர்.

இதேவேளை, குறித்த பாத யாத்திரையில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஐந்து இளைஞர்கள் இணைந்து செல்லவுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர்கள் சேவைகள் மன்ற பணிப்பாளர் வினோதினி சிறிமோகன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வுகளில் வடக்கு மாகாண இளைஞர்கள் சேவை மன்ற பணிப்பாளர் ஜெமினி சந்திரசேகர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு யாத்திரிகர்களை வழியனுப்பிவைத்தார். (எ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்க போவது யார்?

## முதல்வர் தெரிவு இன்று

கொழும்பு, ஜூன் 16

**கொழும்பு மாநகர சபையின் முதல்வர், பிரதி முதல்வரை தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.**

இதேசமயம், கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஆளும் தேசிய மக்கள் சக்தியும் எதிர்க்கட்சிகளும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின்படி எந்த வொரு கட்சியும் அல்லது சுயேச்சை குழுவும் பெரும் பான்மை பெறவில்லை.

மொத்தம், 117 உறுப்பினர்களை கொண்ட கொழும்பு மாநகர சபையில், தேசிய மக்கள் சக்தி 48 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் 29 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 13 ஆசனங்களையும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன 5 ஆசனங்களையும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் 4, சுயேச்சைக் குழு - 03 மூன்று ஆசனங்களையும் சர்வஜன அதிகாரம் 2, ஐக்கிய சமாதான கூட்டணி 2 ஆசனங்களும், சுயேச்சை குழு -04, 05 என்பன தலா இரண்டு ஆசனங்களையும் கொண்டுள்ளன.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்க 59 உறுப்பினர்கள் தேவைப்படும். ஆனால், எந்தக் கட்சியும் பெரும் பான்மை பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில், கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை அமைப்பது தொடர்பாக அதன் முதல் கூட்டம் இன்றைய தினம் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மனைவி சுட்டுக்கொலை; கணவன் தலைமறைவு!

கொழும்பு, ஜூன் 16

குடும்பத் தகராறால் மனைவியை சுட்டுக் கொன்றுவிட்டு கணவன் தலைமறைவாகியுள்ளார். மொனராகலை - மெதகம - பலகசர பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது ,பலகசர வீதிக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நிலையில் பெண் ஒருவர் கிடப்பதாக மெதகம பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, அங்கு சென்ற பொலிஸார் பெண்ணை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் உயிரிழந்து விட்டார். 38 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

விசாரணைகளில் பெண்ணுக்கும் அவரின் கணவருக்கும் நீண்டகாலமாக குடும்பத் தகராறு இருந்துள்ளது. இந்த நிலையில், கணவன் உள்நாட்டு துப்பாக்கியால் சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிய வருகிறது.

சந்தேக நபரை கைது செய்ய மெதகம பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# இஸ்ரேலில் இலங்கை பெண் காயமடைந்தார்

டெல்அவிவ், ஜூன் 16

இஸ்ரேல் மீது ஈரான் மேற்கொண்ட ஏவுகணை தாக்குதலில் இலங்கை பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இஸ்ரேலின் பட்யாம் பகுதியை குறி வைத்து ஈரான் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது.

இதில், இலங்கை பெண்மீது விழுந்த கண்ணாடி துண்டுகளால் அவர் காயமடைந்துள்ளார்.

அவரது நிலைமை ஆபத்தானதாக இல்லை என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமால் பண்டார தெரிவித்துள்ளார். (ஐ)

# நடிகர் மோகன்லால் இலங்கை வருகை!



கொழும்பு, ஜூன் 16

பிரபல தென்னிந்திய நடிகர் மோகன்லால், குஞ்சாக்கோ போபன் உள்ளிட்டவர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

மகேஷ் நாராயணன் இயக்கத்தில் மம்முட்டி, மோகன் லால், பஹத் பாசில் , குஞ்சாக்கோ போபன் மற்றும் முன்னணி நடிகர், நடிகைகளின் பங்கேற்புடன் உருவாகும் படத்தின் காட்சிகள் இலங்கையில் படமாக்கப்படவுள்ளன. இதற்காகவே, மோகன்லால், குஞ்சாக்கோ போபன் உள்ளிட்டவர்கள் சிறீ லங்கன் எயார் லைன்ஸ் மூலம் நேற்று நாட்டை வந்தடைந்தனர்.

இந்த இரண்டு பிரபல நடிகர்களும் கொச்சினில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். (ஐ)

# உள்நாட்டு துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 16

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இரு வேறு பகுதிகளில் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் உள்நாட்டு துப்பாக்கிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய அரலகங்வில பொலிஸ் பிரிவின் கஜுவத்த மற்றும் சீகிரிய பொலிஸ் பிரிவின் இலுக்வல பகுதிகளில் இந்த சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டன.

இதன்போது சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், உள்நாட்டு துப்பாக்கிகள் இரண்டையும் பறிமுதல் செய்தனர்.

அரலகங்வில கஜுவத்த மற்றும் சீகிரிய இலுக்வல பகுதிகளைச் சேர்ந்த 42, 44 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# பொய்கள், ஊழல் மோசடிகளையே இந்த அரசாங்கமும் தொடர்கிறது!

கொழும்பு, ஜூன் 16

நாட்டில் முந்தைய ஆட்சி காலங்களில் பொய்களும் ஊழல் மோசடிகளுமே நடைமுறையிலிருந்தன என்றுதற்போதைய அரசாங்கம் குற்றஞ்சாட்டியது. ஆனால், அதே முறைமையையே இந்த அரசாங்கமும் பின்பற்றுகின்றது. இதுவா மக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட முறைமை மாற்றம்? என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், நாட்டில் முறைமை மாற்றத்தை ஏற்படுத்துவதாக அரசாங்கம் மக்களுக்கு வாக்குறுதியளித்தது. ஆனால், இன்று ஜனாதிபதியின் அனுமதியுடன் கைதிகளை விடுதலை செய்வதற்கான முறைமை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதி உட்பட பொறுப்பு கூற வேண்டியவர்களுக்குக்கூட தெரியாமல் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்றுதகவல்கள் கிடைத்துள்ளன.

துறைமுகத்திலிருந்து சிவப்பு அறிவித்தல் விடுக்கப் பட்டிருந்த 323 கொள்கலன்களும் இவ்வாறு தான் விடுவிக்கப் பட்டுள்ளன. இங்கும் முறை மையில் மாற்றம் ஏற்படவில்லை.

வரவு - செலவு திட்டத்தில் கூறப்பட்டதைப் போன்று ஒய்வு பெற்றோரின் சேமிப்பு கணக்குகளுக்கான 3 சதவீத வட்டியும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. ஆனால், இதற்கு முன்னர் சகல அரசாங்கங்களிலும் கட்சி பேத மின்றி ஓய்வு பெற்றவர்களுக்காக 15 சதவீத வட்டி கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும், தற்போது அந்த கொள்கை நடைமுறைப்படுத்தவில்லை.

முந்தைய ஆட்சி காலங்களில் பொய்களும் ஊழல் மோசடிகளுமே நடைமுறையிலிருந்ததாக தற்போதைய அரசாங்கம் குற்றஞ்சாட்டியது. ஆனால், அதே முறைமையையே இந்த அரசாங்கமும் பின்பற்றுகின்றது. இதுவா மக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட முறைமை மாற்றம் - என்றார். (ஐ)

# கொழும்பின் உள்ளூராட்சி சபைகளில் எமது ஆட்சியே

## தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன் 16

பதுளை மாவட்டத்திலுள்ள 9 உள்ளூராட்சி மன்றங்களில் எம்மால் தனித்து ஆட்சியமைக்க முடியாத போதிலும் அவற்றில் 3 சபைகளில் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றிருக்கிறோம். இதேபோன்று கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட ஏனைய உள்ளூராட்சி மன்றங்களிலும் நாமே ஆட்சியமைப்போம் என்று அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

பதுளையில் நடந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் சிக்கல்கள் காணப்படுகின்றன. பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் நாம் வெற்றி பெற்றிருந்தாலும், அவற்றில் ஆட்சியமைப்பது சிரமமாகும்.

பதுளை மாவட்டத்திலுள்ள 18 உள்ளூராட்சி மன்றங்களில் 9 இல் நாம் தனித்து ஆட்சியமைத்துள்ளோம். ஆனால், எஞ்சியுள்ள 9 உள்ளூராட்சி மன்றங்களில் தனித்து ஆட்சியமைக்க முடியாது.



எமக்கு எதிராக ஆட்சியமைப்பதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து பயணிப்பதற்கு பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

எனினும், பண்டாரவளை, ஹல்துமுல்ல மற்றும் ஊவா பரணகம உள்ளிட்டவற்றில் வாக்கெடுப்பின் மூலம் நாம் ஆட்சியமைத்திருக்கின்றோம். இதேபோன்று எஞ்சிய கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட ஏனைய பெரும்பாலான சபைகளிலும் நாமே ஆட்சியமைப்போம்.

ஜனாதிபதியும் பாராளுமன்றமும் தேசிய மக்கள் சக்தியாக இருக்கும் போது உள்ளூராட்சி மன்றங்களும் தேசிய மக்கள் சக்தியாகவே இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால் மாத்திரமே மக்களுக்கான சேவைகளை இலகுவாக வழங்க முடியும் - என்றும் அவர் கூறினார்.

# கொழும்பில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஜூன் 16

கொழும்பில் வீடு ஒன்றின் மீது அடையாளம் தெரியாத நபர்கள் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுபோவில பன்சல வீதியில் உள்ள வீட்டின்மீது சந்தேக நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் யாருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை. நிதி தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

கொ/ஹுவல பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பொருளாதார வளர்ச்சி 3.5 சதவீதமாகக் குறைவடையும்!

## உலக வங்கி எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 16

நாட்டின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டு 3.5 சதவீதமாக குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.இது, நெருக்கடியின் விளைவுகள், வளர்ச்சிக்கான கட்டமைப்பு தடைகள் மற்றும் அதிகரித்த உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளை பிரதிபலிக்கிறது என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், 2026, 2027 ஆம் ஆண்டுகளிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேலும் 3.1 சதவீதமாக குறைவடையலாம். 2024 ஆம் ஆண்டில் எதிர்பாராத விதமாக 6 சதவீத வளர்ச்சி ஏற்பட்டிருந்தது.

எனினும், அதிகரித்து வரும் உலகளாவிய வர்த்தகத் தடைகள், நிதிச்சந்தை ஏற்ற இறக்கம் ஆகியவற்றுக்கு மத்தியில் தெற்காசியாவில் செயல்பாடு குறைந்து வருவதே பொருளாதார வீழ்ச்சிக்கான காரணம். முன்னதாக, 2025, 2026 ஆம் ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி 6.3 சதவீதமாக இருக் கும் என்று கணிப்பிடப்பட் டிருந்தது.

எனினும், கடந்த ஜனவரி மாத கணிப்புகளுடன் ஒப்பிடும்போது, இந்த முன்னறிவிப்பு 0.4 சதவீத புள்ளிகளால் குறைவாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழிலிருந்து சென்ற பேருந்து லொறியுடன் மோதி விபத்து!

## பெண் ஒருவர் பலி எண்மர் காயம்!

கொழும்பு, ஜூன் 16

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்ற தனியார் பேருந்து சிறிய ரக லொறியுடன் மோதிய விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். 8 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அநுராதபுரம் - மதவாச்சியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் மதவாச்சி மருத்துவமனை, அநுராதபுரம் போதனா மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்தில் மதவாச்சி , கடவத்கம, ஹல்மில்லவெவ பகுதியை 52 வயது பெண்ணே உயிரிழந்தார்.

கொழும்பு நோக்கி சென்ற பேருந்து மதவாச்சியில் லொறி ஒன்றை முந்திச் செல்ல முயன்றது. இதன்போது, சாரதியின் கட்டுப்பாட்டை பேருந்து இழந்ததிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் லொறியில் பயணித்த பெண் ஒருவரே உயிரிழந்தார். அத்துடன், அவரின் குடும்பத்தை சேர்ந்தவர்களே காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பேருந்தின்சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்

# பேஸ்புக் மூலம் களியாட்டம் மாணவர் உட்பட 26 பேர் கைது

கொழும்பு, ஜூன் 16

பேஸ்புக் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட களியாட்ட நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 26 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர்.

களுத்துறை - பாணந்துறை - மஹபெல்லான பகுதியில் சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் போதைப்பொருட்களுடன் களியாட்ட நிகழ்வு ஒன்று இடம்பெறுவதாக அலுபோமுல்ல பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது, 26 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 10 பேர் பல்கலைக்கழக மாணவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அலுபோமுல்ல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# சிறை உயரதிகாரிகளின் சொத்துகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 16

அனைத்து சிறைச்சாலை உயர் அதிகாரிகளின் சொத் துகள் குறித்து, இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழு, குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை தொடங்கியுள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகளின் சொத்துகள் குறித்து விசாரணை நடத்தக் கோரி பல்வேறு தனிநபர்கள், சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில் வங்கிக் கணக்குகள், வாகனங்கள், சொத்துகள் உள்ளிட்ட அனைத்து சொத்துகளிலும் முழுமையான விசாரணை நடத்தப்படும்.

அனைத்து சிறைச்சாலை அதிகாரிகளும் அரசாங்கத்துக்கு சமர்ப்பித்த வருமான அறிக்கையில் (சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக் கைகள்) குறிப்பிடப்பட்டுள் ளதை விட அதிகமான சொத்துகளைக்கொண்டிருந் தால் அவர்கள் அவற்றை எவ்வாறு பெற்றார்கள் என்பதை நீதிமன்றத்தில் விளக்க வேண்டும் என்று இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# ஜனாதிபதி அநுர குமார நேற்று நாடு திரும்பினார்



கொழும்பு, ஜூன் 16

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான குழுவினர் ஜேர்மனிக்கான உத்தியோகபூர்வ பயணத்தை நிறைவு செய்து நேற்று காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி அநுர குமார ஜேர்மனி ஜனாதிபதி, வெளியுறவு அமைச்சர் ஆகியோரை சந்தித்தார்.

அத்துடன், ஜேர்மனி வாழ் இலங்கை மக்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

அத்துடன், இந்தப் பயணத்தில் இரு தரப்பு ஒப்பந்தங்கள் பலவும் மேற்கொள்ளப்பட்டன. (ஐ)

# சாரதிகளுக்கான அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூன் 16

மழையுடனான வானிலை தொடரும் நிலையில் வாகனங்களை செலுத்தும் போது அவதானத்துடன் செயல்படுமாறு சாரதிகளுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

வேகக் கட்டுப்பாட்டுக் கமைய வாகனத்தை செலுத்துமாறு பதில் பொலிஸ் ஊடக பேச்சாளர் எஃப். யூ. வுட்லர் தெரிவித்துள்ளார்.

மண்சரிவு, பனிமூட்டம், பலத்த மழை, காற்று மற்றும் வழுக்கும் வீதிகள் தொடர்பில் மிகவும் அவதானத்துடன் செயல்படுமாறு அவர் கோரியுள்ளார்.

அத்துடன்,

இரவு நேரங்க ளில் ஒளிவிளக்குகளை மங்கச் செய்யாமல் வாகனத்தைச் செலுத்துமாறும் பதில் ஊடக பேச்சாளர் சாரதிகளை அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

### மதவாச்சி பிரதேச சபை:

# அதிகார பதவிகள் இரண்டும் வெவ்வேறு கட்சிகளின் வசம்!

கொழும்பு, ஜூன் 16

மதவாச்சி பிரதேச சபையின் தவிசாளர் பதவியை தேசிய மக்கள் சக்தியும், பிரதி தவிசாளர் பதவியை சிறீலங்கா பொதுஜன பெரமுனவும் பெற்றுள்ளன.

மதவாச்சி பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி முன்னணி முன்னிலை பெற்றது. எனினும், அந்தக் கட்சி அறுதிப் பெரும்பான்மையை பெறவில்லை.

எனவே, எந்தக் கட்சிக்கும் தெளிவான பெரும்பான்மை இல்லாததால் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இரகசிய வாக்கெடுப்பு கோரப்பட்டது.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் தவிசாளராகவும் பொதுஜன முன்னணியின் உறுப்பினர் பிரதி தவிசாளராகவும் தெரிவாகினர். (ஐ)

# ஜூன் மாதத்தில் இதுவரையில் 44 ஆயிரம் சுற்றுலாவிகள் வருகை



கொழும்பு, ஜூன் 16

ஜூன் மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 43 ஆயிரத்து 962 சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள தரவுகளின்படி,இந்தியாவில் இருந்து அதிகளவாக 12 ஆயிரத்து 362 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். இது மொத்த சுற்றுலா பயணிகளின் வருகையில் 28.1 சதவீதமாகும்.

இதேவேளை, பிரித்தானியாவிலிருந்து 3 ஆயிரத்து 740 பேரும் பங்களாதேஷிலிருந்து 2 ஆயிரத்து 717 பேரும் ஜேர்மனியிலிருந்து 2 ஆயிரத்து 439 பேரும் சீனாவிலிருந்து 2 ஆயிரத்து 403 பேரும் வருகை தந்துள்ளனர்.

இதன்படி, 2025 ஆம் ஆண்டில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 10 இலட்சத்து 73 ஆயிரத்து 765 ஆக அதிகரித் துளளது.

இதில், 2 இலட்சத்து 16 ஆயிரத்து 422 பேர் இந்தியாவிலிருந்தும் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 285 பேர் ரஷ்யாவிலிருந்தும் ஒரு இலட்சத்து 14 பேர் பிரித்தானியாவிலிருந்தும் வருகை தந்துள்ளனர். (ஐ)

# வனஜீவராசிகள் திணைக்களத்தில் 3,451 பேருக்கு நிரந்தர நியமனங்கள்

கொழும்பு, ஜூன் 16

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தில் பணிபுரிந்து வரும் 3 ஆயிரத்து 451 பயிற்சிப் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு இலட்சம் பல்நோக்கு அபிவிருத்தி பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் அவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். இதற்கமைய சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தியினால் 50 பணியாளர்களுக்கான நிரந்தர நியமனங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. இந்தநிலையில், மனித - யானை மோதலை தடுப்பதற்கு நிரந்தர நியமனம் பெற்றவர்களிடம் இருந்து அதிக பங்களிப்பை எதிர்பார்ப்பதாக சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன், மனித - யானை மோதலை தடுப்பதற்கு நாடு முழுவதும் 5 ஆயிரத்து 644 கிலோ மீற்றர் நீளமுள்ள 437 மின்சார வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வெசும பணம் மோசடி பெண் அதிகாரிக்கு மறியல்

கொழும்பு, ஜூன் 16
அஸ்வெசும பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைதான பிரதேச செயலக பெண் அதிகாரியை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

அஸ்வெசும பணத்தை மோசடி செய்ததாக சந்தேகத்தின் பேரில் சம்பந்தப்பட்ட இரத்தினபுரி - கொலொன்ன பிரதேச செயலக பெண்அதிகாரி கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸ் நிதி குற்றப்பிரிவால் கைது செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

35 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் அஸ்வெசும பணத்தை மோசடி செய்தார் சந்தேக நபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் திறப்பு

கொழும்பு, ஜூன் 16
நுவரெலியா பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த மழை காரணமாக ஒவ்வொரு வான்கதவும் இரண்டு அடி அகலத்துக்கு திறக்கப்பட்டுள்ளன.

இதனால்,பொல்கொல்ல அணையிலிருந்து விக்ரோரியா நீர்த்தேக்கம் வரையிலான மகாவலி ஆற்றின் தாழ்நில பிரதேசங்களில் வசிப்போர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் கேட்டுள்ளது. (ஐ)

# காய்ச்சலுள்ள சிறுவர்களை பாடசாலை அனுப்பாதீர்கள்

## மருத்துவர்கள் அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 16
காய்ச்சல், சளி, இருமல் உள்ள பிள்ளைகளை பாடசாலை, பாலர் பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறு பெற்றோரை அறிவுறுத்தியுள்ளார் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் குழந்தை மருத்துவ நிபுணர் மருத்துவர் தீபால் பெரேரா.

மேலும், "டெங்கு, சிக்குன்குனியா மற்றும் இன்புளுவன்ஸா ஈவால் பாதிக்கப்பட் சிறுவர்கள் ஓடி குதித்து விளையாடினால் அவர்களுக்கு இதய பாதிப்பு (மாரடைப்பு) ஏற்படக்கூடும். மேலும் உயிருக்கு ஆபத்தான நிலைகூட ஏற்படலாம்", என்றும் அவர் குறிப்பிட்டார்.

"டெங்கு இருக்கும் போது நீங்கள் கடினமாக உழைத்தால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படலாம் உங்கள் உயிரைக்கூட இழக்க நேரிடும்.

"வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பற்றிய தகவல்கள் அதிகமாக இருக்கின்றன. அத்தகைய சிறுவர்களுக்கு அரிசி கஞ்சி, உப்பு கஞ்சி, வாழைப்பழம் போன்றவற்றை வழங்குவது அவசியம்" என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# வாகனங்களை வாடகைக்கு பெற்று விற்பனை செய்த இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 16
வாடகைக்கு வாகனங்களை பெற்று போலி ஆவணங்களைத் தயாரித்து அவற்றை விற்பனை செய்த சந்தேகநபர்கள் இருவரை மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைதானவர்கள் மாளிகாவத்தை, ஹொரணையை சேர்ந்த 30, 36 வயதுடையவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில்,

அநுராதபுரத்தில் வாடகை அடிப்படையில் வான் ஒன்றை பெற்று பெற்று அதை 10 இலட்சம் ரூபாய்க்கும் பொரளையில் வாடகை அடிப்படையில் ஒரு காரை பெற்று 90 இலட்சம் ரூபாய்க்கும் விற்றுள்ளனர்.

இதேபோன்று, பாணந்துறையில் கார் ஒன்றை பெற்று 58 இலட்சம் ரூபாய்க்கும் மொரகஹஹேன, வெல்லம்பிட்டியில் 2 கார்களை பெற்று அதனை 50 இலட்சம், 42 இலட்சம் ரூபாய்க்கும் விற்பனை செய்துள்ளனர் என்றும் விசாரணைகளில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# 20 - 40 வயதினரிடையே இதய நோய் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 16
சிகிச்சைக்கு வரும் 10 இள வயதினரில் 5 பேருக்கு இருதய நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று இருதய நோய் சிகிச்சை நிபுணர் மருத்துவர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

20 முதல் 40 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே இருதய நோய்ப் பாதிப்பு வேகமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரச மருத்துவமனைகளில் மருந்து பற்றாக்குறை இல்லை

## சுகாதார பிரதி அமைச்சர்

■ விநியோகத்தில் சிக்கல்கள் உள்ளன

கொழும்பு, ஜூன் 16
**அரச மருத்துவமனைகளில் பொதுவாக பரிந்துரைக்கப்படும் மருந்துகளுக்கு பற்றாக் குறை இல்லை என்று பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.**

நாட்டில் தற்போது மருந்து பற்றாக்குறை நிலவுவதாக வெளியான செய்திகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நிலைமைகளுக்கான அத்தியாவசிய மருந்துகள் இடையூறு இல்லாமல் கிடைக்கின்றன. இருப்பினும், சில மருந்துகள் தொடர்ச்சியான விநியோகச் சங்கிலி சிக்கல்களால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த இடையூறுகள் புதியவை அல்ல, அவை பல ஆண்டுகளாக உள்ளன", என்றும் அவர் குறிப்பிட்டார்.

"2026ஆம் ஆண்டுக்குள் இந்தப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க தற்போது விரிவான நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன", என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# ஜேர்மனிவாழ் இலங்கையரை சந்தித்தார் ஜனாதிபதி அநுர



கொழும்பு, ஜூன் 16
ஜேர்மனிக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்தினம் அங்கு வசிக்கும் இலங்கையர்களை சந்தித்தார்.

இந்தக் கூட்டத்தில், ஜேர்மனியில் வசிக்கும் பல இலங்கை வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் பங்கேற்றனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உரையாற்றுகையில்,

"ஒரு வளமான அரசுக்கு நாம் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் பங்களிப்பை பாராட்டிய ஜனாதிபதி, சரிந்த அரசை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிலையான ஆரம்பம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது", என்று கூறினார். (ஐ)

# லிப்ட் இடிந்து இளைஞர் பலி

கொழும்பு, ஜூன் 16
பிரபல ஹோட்டல் ஒன்றில் லிப்ட் இடிந்து வீழ்ந்ததில் 19 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு - மொறட்டுவையிலுள்ள ஹோட்டலில் பணிபுரிந்த இளைஞர் ஒருவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த இளைஞன் பாணந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தாரெனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொறட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சீனிக்கான வரி குறைப்பின்போது குற்றவியல் குற்றம் நடக்கவில்லை

கொழும்பு, ஜூன் 16
2020 ஒக்ரோபரில் சீனிக்காக விதிக்கப்பட்ட 50 ரூபாய் வரியை 25 சதம் வரை குறைத்தமை தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில் எவ்விதமான குற்றவியல் குற்றமும் கண்டறியப்படவில்லை என சட்டமா அதிபரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வு திணைக்களம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு அறியப்படுத்தியுள்ளது.

வரி குறைப்பு தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் கெமிந்த பெரேரா முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோமே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், விசாரணைகளை நிறைவு செய்வதற்கு அனுமதி வழங்கிய நீதிவான் இந்தச் சம்பவத்தில் ஏதேனும் முறைகேடுகள் அல்லது கையூட்டல் இடம்பெற்றிருக்குமாயின், அது தொடர்பான ஆவணங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சாத்தியம் காணப்படுகிறது என்று கூறினார்.

கடந்த 2020 ஒக்ரோபர் 13 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் சீனிக்கு விதிக்கப்பட்ட 50 ரூபாய் வரியை 25 சதமாகக் குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தின் மூலம் அரசாங்கத்துக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டதா? என்பதை கண்டறிவதற்கு விசாரணை நடத்துமாறுக் கோரி முறைப்பாடு அளிக்கப்பட்டது. சீனிக்கான வரியை குறைக்கும் தீர்மானத்தின் ஊடாக அரசாங்கத்திற்கு 1,600 கோடி ரூபாய்க்கும் அதிக நட்டம் ஏற்பட்டதாகவும் குறைக்கப்பட்ட வரியின் நன்மைகள் பொதுமக்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படாது மோசடி இடம்பெற்றதாகவும் பலர் குற்றஞ்சாட்டியமை நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)

# போதைப்பொருளுடன் இளைஞர் கைதானார்!

கொழும்பு, ஜூன் 16
205 கிராம் குஷ் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

கொழும்பு, வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பத்தரமுல்லை தியன பூங்கா வில் வைத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவர், கொழும்பு 8 பிரதே சத்தைச் சேர்ந்த 25 வயது இளைஞராவார்.

சந்தேக நபரிடமிருந்து 205 கிராம் குஷ் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணை ளுக்காக வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்படை தளபதி ஆளுநர் சந்திப்பு



திருகோணமலை, ஜூன் 16
கடற்படையின் 28ஆவது கிழக்கு மாகாண கடற்படைத் தளபதியாக கடந்த மாதம் கடமைகளைப் பொறுப்பேற்ற ரியர் அட்மிரல் ரவீந்திர திசேரா, திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவை சந்தித்து கலந்துரையாடினார். (எ)

### காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள்

## அலுவலகத்தை அகற்ற முயற்சி அம்பாறையில் ஆர்ப்பாட்டம்!

கிளிநொச்சி, ஜூன் 16
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அலுவலகத்தை அகற்ற முற்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து அம்பாறையில் இன்று ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் ஊடகச் சந்திப்பு கிளிநொச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது. இதில், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி யோகராசா கலாறஞ்சினி கூறுகையில்,

"காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் பிள்ளைகளுக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை. இந்த அரசும் அதற்கான நீதியைப் பெற்றுத் தருவதற்கு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில், அம்பாறை தம்பிலுவில் மத்திய சந்தைப் பகுதியில் இயங்கி வருகின்ற அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அலுவலகத்தை உடனடியாக அகற்றுமாறு அதன் தலைவிக்கு மக்களின் வாக்குகளைப் பெற்று தவிசாளராகிய சசிக்குமார் என்பவரால் அலுவலகத்தை அகற்றுமாறு அறிவுறுத் தப்பட்டிருப்பதாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்றைய தினம் காலை அம்பாறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

ஐ.நா. கூட்டத் தொடரில் தங்களுக்கான நீதிப் பொறிமுறை விடயங்களை வலியுறுத்துவதுடன் இலங்கைக்கு பயணம் செய்யும் ஐ. நா. பிரதிநிதியிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களைச் சந்திப்பதோடு செம்மணி மனிதப் புதைகுழி மற்றும் கொக்குத்தொடுவாய், மன்னார் மனிதப் புதைகுழிகளையும் பார்வையிட வேண்டும் என்றும் அவை தொடர்பில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்"- என்ற கோரிக்கைகளையும் முன்வைக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (எ)





கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கல்முனை வடக்கு பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய ஆனி மாத பௌர் ணமி கலை விழா கடந்த 10 ஆம் திகதி கல்முனை வடக்கு பிரதேச செயலக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர் ச. நவநீதன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

(படங்கள் - வி. ரி. சகாதேவராஜா)

### திருகோணமலை ஈச்சிலம்பற்றில்

## விடுதலை புலிகள் புதைத்த ஆயுதங்களை தேடி அகழ்வு



திருகோணமலை, ஜூன் 16
**திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் பகுதியில் உள்ள வீடொன்றின் காணியில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் இருப்பதாக தெரிவித்து நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை பெக்கோ இயந்திரம் மூலம் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.**

மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் முன்னிலையில் இந்த அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

ஈச்சிலம்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மூதூர் நீதிமன்றத்தின் அனுமதியுடன் குறித்த அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்ட நிலையில் அகழ்வு இடம்பெற்ற இடத்திலிருந்து எந்தவித தடையப் பொருட்களும் மீட்கப்படவில்லை.

இதனையடுத்து மூதூர் நீதிமன்ற நீதிபதி அகழ்வை இடைநிறுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவு வழங்கியதையடுத்து சுமார் ஒரு மணி நேரம் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டது.

குறித்த இடத்துக்கு விசேட அதிரடிப்படையினர், தடயவியல் பிரிவு பொலிஸார், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் பிரசன்னமாகியிருந்தனர். (எ)

## இரு நூல்கள் வெளியீடு



கிண்ணியா, ஜூன் 16
கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் கிண்ணியா எழுத்தாளர் ஏ. எம். கஸ்புள்ளா எழுதிய "பாரம்பரிய சீனடி தற்காப்புக்கலை" பற்றிய ஒரு நோக்கியல் எனும் ஆய்வு நூல் மற்றும் இலங்கை கல்வியமைச்சால் அங்கீகாரம் பெற்ற "அணில் சொல்லிய பாடம்" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (எ)

## 33 திட்டங்களை மீளாய்வு செய்ய ஆளுநர் தலைமையில் கூட்டம்



திருகோணமலை, ஜூன் 16
இந்திய அரசின் நிதியுதவியுடன் கிழக்கு மாகாணத்தில் 2. 3 பில்லியன் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ள 33 முன்மொழியப்பட்ட திட்டங்களை மீளாய்வு செய்வதற்கான விசேட கூட்டம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தின் அமைச்சுகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் மற்றும் துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் பங்கேற்றனர். (எ)

## கிழக்கில் 304 சிறுமிகள்மீது பாலியல் துஷ்பிரயோகம்

மட்டக்களப்பு, ஜூன் 16
மட்டக்களப்பு மாவட்டத்தில் 93 சிறுமிகள் உட்பட கிழக்கு மாகாணத்தில் 16 வயதுக்கு உட்பட்ட 304 சிறுமிகள் 2024 ஆம் ஆண்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளமை மிகவும் கவலைக்குரியது என கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தர தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் மக்கள் பாதுகாப்பு எனும் கருத்திட்டத்தின் அடிப்படையில் குழந்தைகள் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகத்தை தடுக்கும் "சரோஜா" திட்டத்தை ஆரம்பித்து வைக்கு நிகழ்வு மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி. லலித் லீலாரத்தினவின் தலைமையில் காரியாலய மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர், சிறுமிகள் மீதான பாலியல் சீண்டல்களுக்கு முதல் காரணம் அவர்களுக்கு அருகிலுள்ள உறவினர்களே ஆகும்.

இவ்வாறான குற்றம் தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமிகளின் தாய், தந்தை பொலிஸ் நிலையத்துக்கு செல்வதில் வெட்கம் மற்றும் கௌரவம் காரணமாக முறைப்பாடு கிடைப்பதில்லை.

ஒரு சிறுமிக்கு பாலியல் சீண்டல் நடந்த பின்னர் அதனை முறைப்பாடு செய்வதால் பிரயோசனமில்லை. எனவே தவறான நடத்தைக்கு உள்ளாக முதல் பாதுகாப்பது தான் சிறந்தது.

அதற்கு முதலில் கிராமம், பிரதேசங்களில் எத்தனை பெண் குழந்தைகள் பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றார்கள் எனக் கண்டறிய வேண்டும்.

சில பிள்ளைகளின் தாயார் வெளிநாடு சென்றிருப்பார் அல்லது தந்தை வெளிநாடு சென்றிருப்பார் அல்லது தாய், தந்தையினர் மதுபோதைக்கு அடிமையாகி இருப்பார்கள்.

இவ்வாறு பிரச்னை உள்ள குடும்பங்களில் உள்ள பெண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லாததால் அவர்கள் இந்த பாலியல் சீண்டல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

பெண் குழந்தைகள் பாதிக்கப்படுவதற்கு முன்னர் பாதுகாப்பதே இந்த "சரோஜா" திட்டம். எனவே, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பொலிஸ் நிலையங்களின் கீழ் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இவ்வாறு பாதுகாப்பற்ற குழந்தைகள் எத்தனை பேர் உள்ளனர் என கணக்கு எடுக்கப்பட்டு அவர்களைத் தொடர்ந்து பாதுகாப்பது தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கும் போர்ப்பதற்றம்

# இஸ்ரேல் தாக்குதலால் தெஹ்ரானில் பற்றி எரியும் எண்ணெய் கிடங்குகள்



தெஹ்ரான், ஜூன் 16

**இஸ்ரேலின் தாக்குதல்களால் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இரண்டு முக்கிய எரிசக்தி நிலையங்கள் பாதிக்கப்பட்டன. அத்தோடு, எண்ணெய்க் கிடங்குகள் பற்றி எரிகின்றன.**

ஈரானின் அணுசக்தி கட்டமைப்புகள் மற்றும் இராணுவத் தளங்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல் மற்றும் ஈரானின் பதிலடி தாக்குதலால் மத்திய கிழக்கில் பெரும் போர்ப்பதற்றம் நிலவுகிறது.

ஈரான் மீது கடந்த 12 ஆம் திகதி அதிகாலையில் இருந்து இஸ்ரேல் அதிரடி தாக்குதலை தொடங்கியது. தங்களை தற்காத்துக்கொள்ள நடத்தப்படும் முன்கூட்டிய தாக்குதல் இது என அறிவித்த இஸ்ரேல், இந்த இராணுவ நடவடிக்கைக்கு "ஒப்ரேஷன் ரைசிங் லயன்" என பெயரிட்டு இருந்தது.

ஈரானின் அணுசக்தி மையங்கள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணைகள் வைக்கப்பட்டிருக்கும் இராணுவத் தளங்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகளை இஸ்ரேலின் போர் விமானங்கள் துல்லியமாக தாக்கின.

குறிப்பாக ஈரான் தலைநகர் தெஹ்ரான் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகள், மேலும் முக்கிய அணுசக்தி மையமான நட்டன்ஸ், இஸ்பகான் உட்பட பல அணுசக்தி மையங்கள் தகர்க்கப்பட்டன. 200இற்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் ட்ரோன்கள் மூலம் நடத்திய இந்தத் தாக்குதலில் 78 பேர் உயிரிழந்தனர். 320 பேர் காயமடைந்ததாக ஐ.நாவுக்கான ஈரான் தூதுவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் அறிவித்தது. "அவர்கள் செய்த இந்தப் பெரிய குற்றத்திலிருந்து தப்பிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்று ஈரான் உச்சபட்ச தலைவர் ஐயத்துல்லா அலி காமெனி அறிவித்திருந்தார்.

அவர் அறிவித்த சில மணி நேரத்திலேயே ஈரானும் பதிலடி கொடுத்தது. இதன்படி 200இற்கும் மேற்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் 100இற்கு மேற்பட்ட ட்ரோன்களை நள்ளிரவில் இருந்து அலை அலையாக இஸ்ரேலுக்குள் செலுத்தியது.

இவற்றை நடுவானில் இடைமறித்து அழித்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. ஆனாலும் சில ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் இஸ்ரேலின் பலம் பொருந்திய அயர்ன் டோம் வான் பாதுகாப்பு அமைப்பையும் உடைத்துக் கொண்டு பல இடங்களை தாக்கியது.

குறிப்பாக ஜெருசலேம், டெல் அவிவ் போன்ற நகரங்களில் நடந்த தாக்குதலில் பெரும் சேதம் விளைந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பகுதிகளில் ஏராளமான கட்டடங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன. பல இடங்களில் வெடிப்பு சத்தங்களும் கரும்புகை வெளியேறும் காட்சிகளும் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

ஈரானின் இந்த பதிலடியில் 3 பேர் உயிரிழந்ததாகவும் 70இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. பல இடங்களில் வான் தாக்குதலுக்கான சைரன்கள் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருந்தன.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து மக்களை பாது காப்பான இடங்களுக்கு செல் லுமாறு இஸ்ரேல் அறிவுறுத் தியது. பல இடங்களில் ஈராணின் தாக்குதலை அமெரிக்க தயாரிப்பு வான் பாதுகாப்பு அமைப்புகள் முறியடித்ததாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறினர்.

ஈரான் மீதான இஸ்ரேலின் தொடர் தாக்குதல் மற்றும் ஈரானின் பதில் தாக்குதல், தீவிர போராக உருமாறும் வாய்ப்பு இருப்பதாக உலக நாடுகள் அச்சம் வெளியிட்டுள்ளன. ஈரான் மீதான இஸ்ரேலின் இந்தத் தாக்குதலுக்கு பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், இரு நாடுகளும் விரைவில் போர் நிறுத்தம் செய்யுமாறும் வலியுறுத்தியுள்ளன.

மறுபுறம் தங்கள் மீது தாக்குதல் நடத்துவதை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது. இல்லையென்றால் தெஹ்ரானை எரித்து விடுவோம் என அந்த நாட்டு இராணுவ அமைச்சர் கேட்ஸ் மிரட்டல் விடுத்துள்ளார். இதன்படி தங்கள் போர் விமானங்கள் ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்பை உடைத்துக்கொண்டு எளிதாக தெஹ்ரானை அடைந்து வருவதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இஸ்ரேலும் ஈரானும் தங்கள் தாக்குதலை தொடர்வதில் உறுதியாக இருப்பதால் மத்திய கிழக்கில் உச்சக்கட்ட போர்ப்பதற்றம் நிலவி வருகிறது.

இந்த நிலையில், இஸ்ரேல் வீசிய ஏவுகணையால் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இரண்டு முக்கிய எண்ணெய்க் கிடங்குகள் பற்றி எரிந்து வருவதாக ஈரானிய எண்ணெய் அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த அமைச்சின் தகவல் படி, தெஹ்ரானின் வடமேற்கே உள்ள ஷாஹ்ரானில் உள்ள எண்ணெய்க் கிடங்குகளும் நகரத்துக்கு தெற்கே உள்ள மற்றொன்றும் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# இங்கிலாந்தில் ஒரே இரவில் 30000 முறை மின்னல் தாக்கம்

லண்டன், ஜூன் 16

இங்கிலாந்தில் ஒரே இரவில் 30 ஆயிரம் முறை மின்னல் தாக்கியது.

இங்கிலாந்தில் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி வதைத்தது. மேற்கு நகரமான சல்போல்க்கில் 30 டிகிரியை தாண்டி வெயில் கொளுத்தியது. இது இந்த ஆண்டின் அதிகபட்ச வெயில் அளவு இதுவாகும். இந்த நிலையில் தலைநகர் லண்டன், சபோல்க் ஆகிய நகரங்களில் மழை கொட்டித்தீர்த்தது. இதனால், அந்த நகரங்கள் வெள்ளக் காடாக மாறின. வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியில் மீட்புப் பணி நடைபெற்று வருகிறது.

இதேசமயம் மழை பெய்த போது ஒரே இரவில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறை மின்னல் தாக்கியதாக பதிவானது. அவற்றில் பல மின்னல்கள் கடல் பகுதியில் பதிவாகின. இதேவேளை, இங்கிலாந்தின் வடக்கு பிராந்தியத்தில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து அயர்லாந்து, ஸ்கொட்லாந்திலும் கனமழை பெய்வதற்கான மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே மின்னல் தாக்கியதில் அங்கு காட்டுத்தீயும் ஏற்பட்டது. சில மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (எ)

# இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்

ஜெருசலேம், ஜூன் 16

இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் மூவர் பலியாகினர்.

இஸ்ரேல் - ஈரான் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. இதேவேளை, அணு ஆயுதத்தை உருவாக்க ஈரான் முயற்சித்து வருகிறது. ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கினால் தங்கள் நாட்டுக்கு பேராபத்து என்று இஸ்ரேல் கருதுகிறது.

இதனால், ஈரானின் அணு ஆயுத தயாரிப்பு நடவடிக்கையை தடுக்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் இறங்கியுள்ளது.

இதனிடையே, அணு ஆயுத தயாரிப்பை கைவி டும்படி ஈரானிடம், அமெ ரிக்கா பேச்சுவார்த்தை நடத்தி யது. அந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.

இதேவேளை, அணு ஆயுத தயாரிப்புக்கான முக்கிய மூலக்கூறான யுரேனியம் செறிவூட்டலை ஈரான் அதிகரித்தது. தற்போதைய நிலவரப்படி 15 அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் அளவுக்கு ஈரான் யுரேனியம் செறிவூட்டியதாக தகவல் வெளியாகியுள்ளது. அணு ஆயுத தயாரிப்பின் இறுதிக் கட்டத்தை ஈரான் எட்டிவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதையடுத்து, ஈரான் அணு ஆயுதத்தை தயாரித்துவிட்டால் தங்கள் நாட்டின் இருப்புக்கு ஆபத்து எனக் கருதிவரும் இஸ்ரேல் திடீர் தாக்குதல் நடத்தியது.

ஈரானின் அணு ஆராய்ச்சி மையங்கள், ஏவுகணை சேமிப்பு கிடங்குகள் உட்பட பல்வேறு இடங்களை குறிவைத்து இஸ்ரேல் விமானப்படை தாக்குதல் நடத்தியது.

இந்த நிலையில், இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் ஏவு கணை, ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த ஏவுகணைகள், ட்ரோன்கள் இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பால் நடுவானில் சுட்டு வீழ்த்தப்பட்டு வருகின்றன.

ஆனாலும், வான் பாதுகாப்பு அமைப்பையும் மீறி சில ட்ரோன்கள் இஸ்ரேலை தாக்கின.

இந்த சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர். இஸ்ரேல் மீது ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில் இந்தத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால், மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

(எ)

# 67 மாடி கட்டடத்தில் பயங்கர தீ விபத்து

டுபாய், ஜூன் 16

டுபாயில் 67 மாடி கட்டடத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. 6 மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

டுபாய் மரினா பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகள் அதிகளவில் உள்ளன. இங்குள்ள "மரினா பின்னகிள்" என்ற அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தில் நேற்று முன்தினம் இரவு 09.30 மணியளவில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்து குறித்து உடனடியாக பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து தீயணைப்புத்துறையினர் மற்றும் அவசர மீட்பு குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.

இந்தக் குழுவினர் கட்டடத்தில் உள்ள 764 வீடுகளில் தங்கியிருந்த 3 ஆயிரத்து 820 பேரை பத்திரமாக வெளியேற்றினர். இதனால் உயிரிழப்புகள் ஏற்படவில்லை. தொடர்ந்து தீயணைப்புத்துறையினர் குடியிருப்பு கட்டடத்தில் பற்றி எரிந்த தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். (எ)

# தொடரும் தாக்குதல் காஸாவில் 16 பேர் பலி

காஸா, ஜூன் 16

காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 16 பேர் பலியாகினர். காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக் ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக் குள் புகுந்து பயங்கரவாதத் தாக் குதல் நடத்தினர். இந்தத் தாக்கு தலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக்கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காஸா முனையில் அதிரடித் தாக்குதல் நடத்தி வருகிறது. இதேவேளை, பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும் இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.


பணயக் கைதிகளில் சிலர் ஹமாஸ் அமைப்பினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இதேவேளை, காஸா முனையில் இஸ்ரேல் ஓராண்டுக்கு மேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், காஸா முனையில் இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 16 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காயமடைந்துள்ளனர். இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் காஸாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உட்பட இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 55 ஆயிரத்தை கடந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி

# அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி சம்பியனானது தென்னாபிரிக்கா




லண்டன், ஜூன் 16

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தென்னாபிரிக்கா சம்பியனானது.

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான 3ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் கிரிக்கெட் இறுதிப்போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வந்தது. இதில் முதல் இன்னிங்ஸில் முறையே அவுஸ்திரேலியா 212 ஓட்டங்களும் தென்னாபிரிக்கா 138 ஓட்டங்களும் எடுத்தன. 74 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய அவுஸ்திரேலியா 2ஆவது நாள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 144 ஓட்டங்கள் எடுத்திருந்தது. தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலியா 2ஆவது இன்னிங்ஸில் 65 ஓவர்களில் 207 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. மிட்செல் ஸ்டார்க் 58 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். தென்னாபிரிக்கா தரப்பில் ரபாடா 4 விக்கெட்களும் லுங்கி இங்கிடி 3 விக்கெட்களும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸ் முன்னிலையும் சேர்த்து அவுஸ்திரேலிய அணி 282 ஓட்டங்களை தென்னாபிரிக்காவுக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தது. லோர்ட்ஸ் மைதானத்தில் 2004ஆம் ஆண்டுக்குப் பிறகு எந்த அணியும் 280 ஓட்டங்களுக்கு மேல் விரட்டிப்பிடித்ததில்லை. சவாலான இலக்கை நோக்கி 2ஆவது இன்னிங்ஸை ஆடிய தென்னாபிரிக்காவுக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. ரையான் ரிக்கெல்டன் 6 ஓட்டங்களில் மிட்செல் ஸ்டார்க் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

2ஆவது விக்கெட்டுக்கு எய்டன் மார்க்ரமும் வியான் முல்டெரும் இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்டனர். இந்த நிலையில், முல்டெர் 27 ஓட்டங்களில் வெளியேறினார்.

அடுத்து வந்த அணித் தலைவர் தெம்பா பவுமாவுக்கு அதிர்ஷ்டம் துணை நின்றது. 2 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது கொடுத்த எளிதான வாய்ப்பை ஸ்டீவன் சுமித் நழுவ விட்டார். கீழே விழுந்ததில் சுமித்துக்கு விரலில் காயம் ஏற்பட்டது. அத்துடன் அவர் சிகிச்சை பெற பெவிலியன் திரும்பினார். அவரால் மறுவாழ்வு பெற்ற பவுமா வாய்ப்பை சரியாக பயன்படுத்தி, தன்னை வலுவாக நிலைநிறுத்திக் கொண்டார். இதனால், ஆட்டம் படிப்படியாக தென்னாபிரிக்கா பக்கம் திரும்பியது. ஏய்டன் மார்க்ரம் தனது 8ஆவது சதத்தை நிறைவு செய்தார். லோர்ட்ஸ் மைதானத்தில் 4ஆவது இன்னிங்ஸில் (இலக்கை துரத்தும் இன்னிங்ஸ்) சதம் அடித்த 6ஆவது வெளிநாட்டு வீரர் என்ற பெருமையை மார்க்ரம் பெற்றார்.

3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்கா அணி 2ஆவது இன்னிங்ஸில் 56 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 213 ஓட்டங்கள் சேர்த்தது. மார்க்ரம் 102 ஓட்டங்களுடனும் தசைப்பிடிப்பை சமாளித்து சாதுர்யமாக ஆடிய பவுமா 65 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு இன்னும் 69 ஓட்டங்களே தேவைப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் 4ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. பவுமா 66 ஓட்டங்களிலும் ஸ்டப்ஸ் 6 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். சிறப்பாக விளையாடி வந்த மார்க்ரம் 136 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். இறுதியில் தென்னாபிரிக்க அணி, 83. 4 ஓவர்களில் இலக்கை கடந்து 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன், முதல் முறையாக ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியனானது. (எ)

# "ஆஸியை வீழ்த்தி விமர்சனத்துக்கு முற்றுப்புள்ளி"

லண்டன், ஜூன் 16

பலவீனமான அணிகளை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றதாக சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். அதனை அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தகர்த்து இருக்கிறோம் என்று தென்னாபிரிக்க அணியின் தலைவர் தெம்பா பவுமா தெரிவித்தார்.

3ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் மோதின. இந்த போட்டியில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தென்னாபிரிக்க அணி சம்பியனானது.

இந்த நிலையில், சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய பிறகு தென்னாபிரிக்க அணியின் தலைவர் தெம்பா பவுமா கூறுகையில், கடந்த சில நாட்கள் எங்களுக்கு சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது. இந்த போட்டிக்காக நாங்கள் கடுமையாக தயாரானோம். நாங்கள் நிறைய நம்பிக்கையுடனும் அதேநேரத்தில் மற்றவர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு இல்லாமலும் இங்கு வந்தோம். இந்த நிலை யில் நாங்கள் சிறப்பாக விளையாடியது மகிழ்ச்சி அளிக்கிறது. இது எங்களுக்கும், எங்கள் நாட்டு மக்களுக்கும் சிறப்பான தருணமாகும். இந்த வெற்றி எங்கள் மனதில் நிலைத்து நிற்கும். அணிக்குள் நல்ல உத்வேகம் இருந்தது. இந்த வெற்றி ஓர் அணியாக எங்களுக்கு மிகவும் தேவையானதாக இருந்தது. நாங்கள் தொடர்ந்து கடினமாக உழைத்தோம். நாங்கள் தொடர்ச்சியாக பல முறை வெற்றி யின் விளிம்பில் வந்து தோல்வியை சந்தித்து வேதனை அடைந்திருக்கிறோம்.

வரப்போகிற பல வெற்றிகளுக்கு இது ஒரு தொடக்கமாக இருக்கும் என்று நம்புகிறேன். ரபாடா அற்புதமான வீரர். அவர் இன்னும் சில ஆண்டுகளில் ஐ. சி. சியின் புகழ் பெற்ற வீரர்கள் பட்டியலில் இடம்பிடிப்பார் என்று நினைக்கிறேன். சர்ச்சைக்கு மத்தியில் போட்டிக்கு வந்த அவர், தன்னால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்திருக்கிறார். மார்க்ரம் அருமையாக விளையாடினார்.

அவர்கள் இருவரும் தங்களது தகுதிக்கு ஏற்ப விளையாடி இருக்கிறார்கள். எங்களது சிறப்பான ஆட்டத்தின் மூலம் இறுதிப்போட்டிக்கு முன்னேறினோம். ஆனால், பலவீனமான அணிகளை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றதாக சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். அதனை இந்த வெற்றியின் மூலம் தகர்த்து இருக்கிறோம்- என்றார். (எ)

# மேடிசன் கீஸ் தோல்வி



லண்டன், ஜூன் 16

குயின்ஸ் கிளப் ரென்னிஸ் தொடர் அரையிறுதியில் மேடிசன் கீஸ் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

குயின்ஸ் கிளப் சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில், மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் மேடிசன் கீஸ், ஜேர்மனியின் டாட்ஜானா மரியாவுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மேடிசன் கீஸ் 3-6, 6-7 (3-7) என்ற செற் கணக்கில் டாட்ஜானா மரியாவிடம் அதிர்ச்சி தோல்வி கண்டு தொடரிலிருந்து வெளியேறினார். (எ)

# பவுமாவை பாராட்ட வேண்டும்

## ஆட்டநாயகன் மார்க்ரம் தெரிப்பு



லண்டன், ஜூன் 16

எங்களுடைய அணித் தலைவர் தெம்பா பவுமாவுக்கு நிறைய பாராட்டுக்கள் கொடுக்க வேண்டும். அவர் எங்களை முன்னின்று வழிநடத்தினார் - இவ்வாறு எய்டன் மார்க்ரம் தெரிவித்தார்.

3ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டியில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தென்னாபிரிக்க அணி சம்பியன் பட்டத்தை வென்றது. இதன் மூலம் 27 ஆண்டுகளுக்கு பின்னர் ஐ. சி. சி. கிண்ணம் ஒன்றை தென்னாபிரிக்க அணி வென்றது.

இந்த போட்டியில் ஆட்டநாயகன் விருது எய்டன் மார்க்ரமுக்கு வழங்கப்பட்டது. இதையடுத்து அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது, முதல் இன்னிங்ஸில் என்னுடைய ஆட்டத்தைப் பார்த்த பின் எப்படி விடயங்கள் சென்றது என்பதைப் பார்ப்பது வித்தியாசமானதாக இருக்கிறது. அதற்கு உங்களுக்கு கொஞ்சம் அதிர்ஷ்டம் தேவை. அது வேலை செய்தது. லோர்ட்ஸ் மைதானம் ஒவ்வொரு வீரர்களும் டெஸ்ட் கிரிக்கெட்டை விளையாட விரும்பும் இடமாகும்.

இங்கே நிறைய தென்னாபிரிக்க ரசிகர்கள் இருந் தார்கள். அவர்களுக்கு முன்னே வென்றது சிறப்பான நாள். இந்தப் போட்டி ஒரு தலைப்பட்சமாக இருக்க வில்லை. நீங்கள் அழுத்தத்தை உள்வாங்கி உங்களுடைய வாய்ப்புகளைப் பயன்படுத்தி அதிகமாக ஓட்டங்கள் குவிக்க வேண்டும். நாதன் லயனுக்கு எதிரான போட்டி சிறப்பானது. வெற்றிக் கோட்டை தாண்டிச் செல்வது கடினமாக இருந்தது.

எங்களுடைய அணித் தலைவர் தெம்பா பவுமாவுக்கு நிறைய பாராட்டுக்கள் கொடுக்க வேண்டும். அவர் எங்களை முன்னின்று வழிநடத்தினார். அவர் முக்கிய மான ஓட்டங்களை அடிப்பதற்கான வழியைக் கண்ட றிந்தார். அவர் விளையாடியதைப் போன்ற ஆட்டத்தை தான் மக்கள் நினைவில் வைத்திருப்பார்கள்- என்றார். (எ)

# 2ஆவது போட்டியும் மழையால் இரத்து

டப்ளின், ஜூன் 16

அயர்லாந்து - மேற்கு இந்திய தீவுகள் இடையிலான 2ஆவது ரி- 20 போட்டி மழையால் இரத்து செய்யப்பட்டது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில், முதல் போட்டி மழையால் இரத்து செய்யப்பட்டது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி நேற்று முன்தினம் நடைபெறுவதாக இருந்தது. ஆனால், இந்த ஆட்டமும் மழை காரணமாக இரத்து செய்யப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளில் உயிரிழந்தவரின் வீட்டிலிருந்த 7.5 பவுண் தங்க நகைகள் காணாமல் போனமை தெரியவந்தது.

இந்த நிலையில், அந்த வீட்டில் பணிப் பெண்ணாக பணியாற்றிய இலங்கையை சேர்ந்த பெண்ணிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதில், இரவுவேளை பெண்ணை கொன்று தங்க நகைகளை கரூருக்கு எடுத்துச் சென்றதுடன், அவற்றை அவர் தனது மகனான பிரபு (வயது 36) என்பவரிடம் வழங்கியமை விசாரணைகளில் தெரிய வந்தது.

இதையடுத்து அந்தப் பெண்ணையும் மகனையும் பொலிஸார் கைதுசெய்தனர் என்று 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## வவுனியா...

இந்த சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபை உறுப்பினர் சிவசங்கர், "நாம் சில தரப்புகளுடன் பேசியிருக்கிறோம். இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன. அந்தவகையில், தேசிய மக்கள் சக்தியால் சிறந்ததோர் அதிகாரத்தை வழங்க முடியும் என்று நினைக்கும் கட்சிகள் எமக்கு ஆதரவை வழங்கும். எனவே, மாநகர சபையின் ஆட்சியை நாம் கைப்பற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

## இலங்கையின்...

வேண்டிய தரநிலையை பூர்த்தி செய்யவில்லை என்றும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) வெளியிட்டுள்ள செலுத்துகை இருப்பு கையேடு - 6 ஆவது பதிப்பு (Balance of Payments Manual, 6th edition) அறிக்கைக்கு அமைய வெளிநாட்டு சொத்து இருப்பானது திரவத்தன்மையை கொண்டிருக்க வேண்டும் அல்லது நிபந்தனையற்ற முறையில் உடனடியாகக் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

ஆனால், நாணய பரிமாற்றம் இதனை நிறைவேற்றத் தவறியுள்ளது. ஏனெனில், பல்வேறு நிபந்தனைகளுக்கு உட்பட்டுள்ளது. எதிர்காலத்தில் குறித்த நிபந்தனைகள் நீக்கப்படுவதற்கான சாத்தியமும் உள்ளது. அந்த வகையில் வெளிநாட்டு கையிருப்பாக அங்கீகரிக்கப்படாத சொத்துகளை சேர்ப்பதனால் இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு மிகைப்படுத்தப்பட்டதாகவே கருதப்படுகிறது.

உதாரணமாக, 2025 மே மாதத்தில் மத்திய வங்கி அறிவித்த உத்தியோக பூர்வ ஒதுக்கீடு 630 கோடி அமெரிக்க டொலராக இருந்தது. சர்வதேச தரநிலைக்கேற்ப கணக்கிட்டிருந்தால் இது சுமார் 490 கோடி அமெரிக்க டொலராக இருந்திருக்கவேண்டும்.

மேலும், இந்த தவறான கணக்கீட்டை பயன்படுத்தி அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் இரண்டு விதமான கணக்கீடுகளை (சீன மக்கள் வங்கி) சேர்த்ததும் சேர்க்காததுமாக ஒரு காலப்புள்ளியிலிருந்து மற்றொரு காலப் புள்ளிவரை வெளிநாட்டு ஒதுக்குகளின் அதிகரிப்பை ஒப்பிட்டு மதிப்பீடு செய்ய முயற்சித்துள்ளனர்.

இதனால் 2022 ஏப்ரல் மாதத்துக்கு பின்னர் வெளிநாட்டு ஒதுக்கங்களின் அதிகரிப்பு தொடர்பில் தவறான தகவல்கள் பகிரப்பட்டுள்ளன. சர்வதேச தரநிலைகளுடன் ஒத்துபோகும் பரிந்துரைக்கப்பட்ட அணுகுமுறை என்னவெனில், ஐ. எம். எவ். தனது ஊழியர் அறிக்கைகளில் "பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு ஒதுக்கம் (usable reserves) எனக் குறிப்பிடும் மதிப்பை அடிப்படையாகக்கொண்டு ஒப்பீடு செய்வதே ஆகும். இதில் பரிமாற்ற ஒப்பந்தம் மற்றும் வெளிநாட்டு ஒதுக்க சொத்துகளுக்கான வரையறையை பூர்த்தி செய்யாத எந்தவொரு சொத்தும் உள்வாங்கப்படாது - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## மனித உரிமைகள்...

நிலையில், எதிர்வரும் 23ஆம் திகதி ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வருவார் என்று கூறப்படுகிறது.

இதனிடையே, எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரில் மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மொழி மூல அறிக்கை வெளியிடப்படும். இதன்போது, இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் ஒன்றை கொண்டு வருவது குறித்து ஆராயப்படும் என்றும் தெரிய வருகிறது. (ஐ)

## தனியார்...

சந்திப்பின்போதே பிரதமர் இதனை தெரிவித்தார்.

மேலும், "நாட்டிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் இணைந்த உயர்கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் கல்வியியல் பட்டங்களின் தரம் தொடர்பில் கல்வி அமைச்சு முறையான ஆய்வை முன்னெடுத்துள்ளது.

இந்த நிறுவனங்களில் கல்வியியல் பட்டம் பெற்ற பட்டதாரிகளின் தகுதிகள், குறிப்பாக இலங்கை ஆசிரியர் சேவையில் நியமனம் பெறுவதற்கான தகுதி மற்றும் பொருத்தப்பாடு தொடர்பாக சிக்கல்கள் எழுந்துள்ளன. அண்மைய ஆசிரியர் நியமனங்கள் முந்தைய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் சேவை விதிமுறைகளுக்கு இணங்கவே மேற்கொள்ளப்பட்டன.

எனினும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் கல்வியியல் பட்டங்களின் தரம், நம்பகத்தன்மை தற்போது கல்வி அமைச்சின் மீளாய் வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஆசிரியர் சேவைக்கான நியமனங்கள் இந்த தர ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும்", என்றார். (ஐ)

## சிறுபான்மை...

அடுத்த 2 வருடங்களுக்கு இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு பிரதி முதல்வர் வழங்குவது எனவும் இணக்கம் காணப்பட்டது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் தவிசாளர் பதவி இலங்கை தமிழ் அரசு கட்சிக்கும் உப தவிசாளர் பதவி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கும் ஒதுக்குவதற்கு இணக்கம் ஏற்பட்டது. எனினும், உபதவிசாளர் பதவியை தலா 2 வருடங்களுக்கு பகிர்வது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட ரிஷாத் பதியுதீனின் கட்சிக்கும் இடையே தொடர்ந்து பேச்சு நடத்தி தீர்வு ஒன்றை எட்டவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு தவிசாளர் பதவியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு உபதவிசாளர் பதவியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெண்கலசெட்டிகுளம் பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு தவிசாளர் பதவியும் தமிழ் அரசு கட்சிக்கு உப தவிசாளர் பதவியும் ஒதுக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், முத்து முகமது, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் க. துளசி, சிறிரெலோ கட்சியின் செயலாளர் ப. உதயராசா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ. மயூர[illegible] பங்கேற்றனர். (ஐ)

# நாய் கடித்த பெண்ணுக்கு ரூ. 40 ஆயிரம் இழப்பீடு!

மட்டக்களப்பு, ஜூன் 16

பக்கத்து வீட்டு பெண்ணை வளர்ப்பு நாய் கடித்ததால் அவருக்கு இழப்பீடாக 40 ஆயிரம் ரூபாயை நாயின் உரிமையாளர் நட்டஈடாக செலுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

மட்டக்களப்பு நகரை சேர்ந்த ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் ஒருவர் தனது வீட்டில் 3 நாய்களை வளர்த்து வருகிறார். இந்த நிலையில், அவரின் அயல் வீட்டில் வசிக்கும் உறவினர்களை நாய்கள் அடிக்கடி கடிக்க முற்பட்டுள்ளன. இதனால், அவர்களிடையே முரண்பாடு நிலவி வந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் தான் வளர்த்த நாய்களை உரிமையாளர் திறந்துவிட்டுள்ளார். அந்த நாய்களில் ஒன்று அயல்வீட்டு பெண்ணை கடித் துள்ளது.

இதையடுத்து, அந்தப் பெண் நாயின் உரிமையாளருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். நாயின் உரிமையாளரை பொலிஸ் நிலையத்துக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை அழைத்த பொலிஸார் இருவரையும் சமரசப்படுத்த முயன்றனர்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட பெண் தனக்கு இழப்பீடாக 40 ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டும் என்று கோரினார். விசாரணையை தொடர்ந்து, நாயின் உரிமையாளர் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 40 ஆயிரம் ரூபாயை இழப்பீடாக வழங்க சம்மதம் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து இணக்கம் எட்டப்பட்டது. (ஐ)

## ஐ.எம்.எவ். பிரதி முகாமை...

ஈடுபடவுள்ளேன்"- என்று அவர் கூறினார்.

2005ஆம் ஆண்டின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் ஒருவர் இலங்கைக்கு வருகை தருவது இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

இந்தப் பயணத்தில், கீதா கோபிநாத் நிதியமைச்சு, மத்திய வங்கி, சர்வதேச நாணநிதியம் ஆகியவை இணைந்து நடத்தும் "மீட்சிக்கான இலங்கையின் பாதை படுகடன் மற்றும் ஆளுகை" என்ற மாநாட்டில் கௌரவ விருந்தினராக கலந்து கொள்வார்.

மேலும், இலங்கை அதிகாரிகளுடனும், இலங்கை - சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றுக்கு இடையிலான ஈடுபாட்டுடன் தொடர்புபட்டவர்களுடனும் கீதா கோபிநாத் பேச்சு நடத்தவுள்ளார் என்றும் அறியவருகிறது. (ஐ)


## வவுனியா மாநகர சபை முதல்வராக...

நேற்றைய தினம் தமிழ் அரசு கட்சி பணிமனையில் நடந்த சிறுபான்மை கட்சிகளின் கூட்டத்தில் இணக்கம் எட்டப்பட்டது.

மொத்தம் 21 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு 11 ஆசனங்கள் தேவை. ஆனால், கடந்த உள்ளூராட்சி தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்த நிலையில் நேற்று எட்டப்பட்ட புரிந்துணர்வின்படி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி 4 ஆசனங்கள், தமிழ் அரசு கட்சி 3, ஐக்கிய மக்கள் சக்தி (ரிஷாத் அணி) 2, ஜனநாயக தேசிய கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஓர் ஆசனத்தை கொண்டுள்ளன. இதன்படி, அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க முடியும்.

இதன்படி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சுந்தரலிங்கம் காண்டீபன் முதல்வராகவும் முதல் இரு வருடங்களுக்கு பிரதி முதல்வராக அந்த கட்சியின் பரமேஸ்வரன் கார்த்தீபனும் பெயரிடப் படவுள்ளனர் என்று அறிய வருகிறது.

## பலாலி இராஜேஸ்வரி...



நேற்றைய தினம் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், இராணுவ அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலர் ஆலய வழிபாட்டில் பங்கேற்றிருந்தனர்.

இதேநேரம், இந்த ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மக்கள் வழிபாட்டில் ஈடுபட கடந்த ஆண்டு இராணுவம் அனுமதி வழங்கியிருந்தது.

இராணுவ நடவடிக்கைகளால் 1990 ஜூன் 15ஆம் திகதி பலாலி கிழக்கிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது. 2002 சமாதான பேச்சு நடைமுறையில் இருந்தபோது இந்த ஆலயத்தில் வழிபட நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், 2005ஆம் ஆண்டு மீண்டும் அனுமதி மறுக்கப்பட்டது.

பின்னர் 2015 இல் கட்டுப்பாடுகளுடன் சில நாட்களுக்கு மட்டும் ஆலயத்தில் வழிபட அனுமதி வழங்கப்பட்டது. 2022ஆம் ஆண்டு இந்த ஆலயத்துக்கு அனுமதி பெற்று சென்றபோது, அங்கிருந்த சிலைகள் களவாடப்பட்டமை தெரிய வந்தது. இந்த நிலையிலேயே கடந்த ஆண்டின் இறுதியில் வெள்ளிக்கிழமைகளில் ஆலயத்தில் வழிபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்து என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வீதி விபத்துகளால் நாட்டில் தினசரி ஏழு உயிரிழப்புகள்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஜூன் 16

**வீதி விபத்துகளால் தினமும் ஏழு பேர் இறக்கின்றனர். இந்தத் துயரத்தை நாம் நிறுத்தவேண்டும். உயிர்களை பாதுகாப்பதை தமது பொறுப்பாகக் கருதி வீதி விபத்துகளை தடுப்பதற்கு பொறுப்புடன் செயல்பட வேண்டும். சட்டங்களால் மட்டுமன்றி சிறந்த தெளிவோடு அதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

கல்வி, உயர்கல்வி அமைச்சும் பொலிஸ் திணைக்களமும் இணைந்து வீதியை பாதுகாப்போம் என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வீதி விபத்துகள் இன்று நாட்டில் பெரும் பேரழிவாக மாறியுள்ளன. இதில், கவலைதரும் விடயம் என்னவென்றால் எமக்கு தேவையும் அர்ப்பணிப்பும் இருந்தால் இவை அனைத்தும் தடுக்கப்படக்கூடியவை என்பதே. வீதி விபத்துகளால் தினமும் ஏழு பேர் இறக்கின்றனர். இந்தத் துயரத்தை நாம் நிறுத்த வேண்டும். வீதி விபத்துகளில் இறப்பவர்கள் ஊனமுற்றவர்கள் அல்லது காயமடைந்தவர்கள் அனைவரும் இந்த நாட்டின் குடிமக்களே.

ஒருவரின் தாய், தந்தை, சகோதரன், சகோதரி அல்லது குழந்தை விபத்தில் சிக்கினால் அது அவர்கள் அனைவரையும் பாதிக்கிறது. இந்த விபத்து புள்ளிவிபரங்கள் வெறும் எண்ணிக்கைகள் அல்ல. அவை ஒரு பெரிய கதையை எமக்கு சொல்கின்றன.

வீதி விபத்துகளைத் தடுப்பது என்பது சட்டத்தை கடைப்பிடிப்பது மட்டுமல்ல மற்றவர்களைப் பற்றி சிந்திக்கும் உயிர்களைப் பாதுகாப்பதை தனது பொறுப்பாகக் கருதும் இரக்கத்துடன் செயல்படும் ஒரு சமூகத்தை உருவாக்குவதும் அவசியம். அரசாங்கம் அத்தகைய அழகான நாட்டை உருவாக்கவே முயற்சிக்கிறது - என்றார். (ஐ)

# அரசாங்க தொழில் வாய்ப்புக்காக பட்டதாரிகள் காத்திருக்கக்கூடாது!

## விவசாய அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

"பட்டதாரிகள் அரசாங்க வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கக்கூடாது என்று கூறியுள்ள விவசாய அமைச்சர் கே. டி. லால்காந்த, "இந்த நாடு வீழ்ச்சியடைந்தமைக்கு நாமும் பொறுப்பு சொல்ல வேண்டும்", என்றும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட நெல் விதை வழங்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வேலையில்லா பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குமாறு பல சந்தர்ப்பங்களில் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தினோம். இவ்வாறு போராட்டம் நடத்தியதன் விளைவுகளை தற்போது பார்க்க முடிகிறது.

அரசாங்கத்தை தொழில் வாய்ப்பு வழங்கும் ஒரு நிறுவனமாக கருதப்பட முடியாது. இந்த நாடு வீழ்ச்சியடைந்தமைக்கு நாம் உட்பட அனைவரும் பொறுப்பு ஏற்க வேண்டும். பட்டதாரிகள் அரசாங்க வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கக்கூடாது - என்றார். (ஐ)

# மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் இளைஞர் பலி!

கொழும்பு, ஜூன் 16

இரண்டு மோட்டார்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

குருநாகல் - மாத்தளை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் 25 வயது இளைஞரே உயிரிழந்தார்.

இவர் தொடங்கஸ்லந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனப் குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொழும்பு தேசிய மருத்துவமனையில் சகல வகை மருந்துகளும் தட்டுப்பாடு!

கொழும்பு, ஜூன் 16

கொழும்பு தேசிய மருத்துவமனையில் அத்தியாவசிய, அத்தியாவசியமற்ற மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன், சி. ரி., எம்.ஆர்.ஐ ஆகிய கதிரியக்க பரிசோதனைகளும் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளன. இதனால், சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர் என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள பிரதான மருத்துவமனையாக கொழும்பு தேசிய மருத்துவமனை உள்ளது. எனினும், தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. மருத்துவமனையின் கையிருப்பில் இருக்க வேண்டிய அத்தியாவசிய மருந்துகளான நோய் எதிர்ப்பு மருந்துகள், மயக்க மருந்து, தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்க்காக வழங்கப்படும் மருந்துகளுடன் அத்தியாவசியமற்ற மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் சி. ரி., எம். ஆர்.ஐ ஆகிய கதிரியல் பரிசோதனைகளும் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளன. பரிசோதனை அறிக்கைகளை வழங்குவதற்கான கணினி இணைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறால் இவ்வாறானதொரு நிலை உருவாகியுள்ளது. எனினும், உரிய தரப்பினர் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை.

இந்நிலையில் சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்கள் தனியார் மருத்துவமனைகளில் பெருந்தொகையைச் செலவிட்டு கதிரியல் பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர். கதிரியல் பரிசோதனைக்கு பரிந்துரைக்கப்படும் நோயாளியின் நோய் தொடர்பில் பரிசோதனை செய்து உரிய காலத்துக்குள் சிகிச்சை அளிப்பது அவசியம். காலதாமதத்தால் உயிராபத்தும் அதிகரிக்கலாம்.

மருத்துவமனை பணிப்பாளர் பதவிக்காக தகுதிவாய்ந்த ஒருவர் நியமிக்கப்படாமையால் கொழும்பு தேசிய மருத்துவமனையின் நிர்வாக பணிகள் சீர்குலைந்துள்ளன. அவசர சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் உள்ள குளிரூட்டி கட்டமைப்பு செயலிழந்துள்ளமையால் சிகிச்சை சேவைகளும் மந்தமடைந்துள்ளன. மருத்துவமனையின் பிரேத அறையிலும் குளிரூட்டியில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக சடலங்களை வைத்திருப்பதிலும் பெரும் நெருக்கடி உருவாகியுள்ளது - என்றார். (ஐ)

# கடலுக்கு செல்லாதீர்கள்!

கொழும்பு, ஜூன் 16

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருவதால் புத்தளம் முதல் மன்னார் மற்றும் காங்கேசன்துறை வழியாக முல்லைத்தீவு வரையிலான கடற்கரையோரக் கடல் பகுதிகள் சில நேரங்களில் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும்.

இந்நிலையில் மீனவர்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் மறு அறிவித்தல் வரை கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இடியுடன் கூடிய மழை பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்கள் தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# மோசடியில் ஈடுபட்ட 88 பேரின் சொத்துகள் முடக்கப்பட்டன!

கொழும்பு, ஜூன் 16

திட்டமிட்ட குற்றம் மற்றும் நிதி மோசடியில் ஈடுபட்ட 88 நபர்களின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 26 பேர் திட்ட மிட்ட குற்றம் மற்றும் போதைப் பொருள் கடத்தல் குற்றச் சாட்டுக்கு உள்ளானவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளமையால் ஏனைய நபர்களின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நிலம், வீடுகள், வங்கி கணக்குகள், வாகனங்கள், நகைகள், வணிக வளாகங்கள் மற்றும் நெல் வயல்கள் ஆகியவை முடக்கப்பட்ட சொத்துகளில் அடங்கும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# 31 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சிகரெட்களுடன் பெண் கைது!

கொழும்பு, ஜூன் 16

31.5 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரட்களை சட்ட விரோதமாக நாட்டுக்குக் கொண்டு வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டார்.

கைதான பெண் கெக்கிராவை, இப்பலோகம பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடையவராவார்.

சந்தேக நபரின் பயணப்பொதிகளில் இருந்து, 'ப்ளாட்டினம்' வகையைச் சேர்ந்த சிகரெட்கள் 21 ஆயிரத்தை சுங்கப் பிரிவினர் கைப்பற்றினர்.

கைதான பெண் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# தயா கமகேவுக்கு சொந்தமான நிறுவனங்கள் பொது ஏலத்தில்!

கொழும்பு, ஜூன் 16

செலுத்தப்படாத கடன்கள் தொடர்பில் முன்னாள் அமைச்சர் தயா கமகேக்கு சொந்தமான நிறுவனங்களை பொது ஏலத்தில் விடுவதற்கு கொழும்பு வணிக உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தயா குறூப் லிமிற்றட், தயா அப்பரல் எக்ஸ்போர்ட்டர்ஸ் (பிறைவேட்) லிமிற்றட், ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிற்றட் ஆகிய நிறுவனங்களே இவ்வாறு ஏலத்தில் விட உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்ற பதிவாளர் மற்றும் துணை நிதி அதிகாரி பிறப்பித்த அறிவிப்பின்படி, ஏலம் எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பீப்பிள்ஸ் லீசிங் ரூ பினான்ஸ் பிஎல்சி சுமார் 10.42 கோடி ரூபாய் நிலுவை தொகையை வசூலிக்க தாக்கல் செய்த வழக்கை தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. மொத்த நிலுவைத் தொகையான 10.83 கோடி ரூபாயில் இதுவரை 40 இலட்சம் ரூபாய் மட்டுமே பிரதிவாதிகளால் தீர்க்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.